விலை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 29 புதன்கிழமை (13.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 25




## வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலய மக்கள் சொந்த இடங்களை பார்வையிட வசதி



### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியேற்றப்படாத மக்கள் தமது சொந்த இடங்களை ஓர் இரு நாட்களில் பார்வையிட லாம் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்துள்ளார்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில், வலி. வடக்கு மக்களுடன் இடம் பெற்ற சந்திப் பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் வட. மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, யாழ். மாவட்டபதில் கட்டளைத்தள பதி மேஜர் ஜெனரல் கத்துருசிங்க தெல்லிப் பழை பிரதேச (02ஆம் பக்கம் பார்க்க)

## திஸ்ஸநாயகம் நாளையே விடுதலை

(கொழும்பு)

நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டு பிணைப்பணம் செலுத்தப்பட்டுள்ள நிலை யில் சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜே.திஸ்ஸ நாயகம் நேற்று இரண்டாவது நாளாகவும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு 20 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட மூத்த ஊடகவியலாளர் ஜே.திஸ்ஸ நாயகம் நேற்று முன்தினம் பிணையில் செல்ல நீதிமன்றத் (16ஆம் பக்கம் பார்க்க)

# உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளின் உடல் நிலை பாதிப்பு

## கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுகோள்

(கொழும்பு)

**பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை விடுதலைசெய்யக் கோரி தமிழ் அரசியல் கைதிகள் மேற்கொண்டு வரும் உண்ணாவிரதப் போராட்டம் 8ஆவது நாளாக நேற் றும் தொடர்ந்தது. இப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கைதி களின் உடல் நிலை மோசமடைந்து வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.** (16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிமக்களின் பொருட்களை இராணுவத்தினர் எடுக்கின்றனரா?

### மறுக்கிறார் இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

மோதல்கள் நடைபெற்ற வன்னிப் பகுதி யிலிருந்து தளபாடங்கள் மற்றும் வாகனங் கள் போன்றவற்றை படையினர் களவாடி தென் னிலங்கைக்குக் கொண்டு செல்வதாக எழுந் துள்ள குற்றச்சாட்டை இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார மறுத்துள்ளார்.

இது தொடர்பாக பி.பி.சிக்கு கருத்துத் தெரி வித்த அவர் மேலும் தெரிவித்ததாவது, படை யினர் ஏராளமான வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள், மிதிவண்டிகள், படகுவெளி இணைப்பு இயந்திரங்கள், இதர உபகரணங் களை அங்கிருந்து கண்டெடுத்தனர்.

எங்களால் கண்டெடுக்கப்பட்ட அனைத்து உபகரணங்களும் கணக்கில் எடுக்கப்பட்டுள் ளன. மேலும் அவை (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிச்சூடு

(கொழும்பு)


ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதி பதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா வின் ஆதரவாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோ கம் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பெண் ஒருவர் கொல்லப்பட்டதுடன் நான்கு பேர் கய

**ஆதரவாளர் ஒருவர் உயிரிழப்பு**

மடைந்துள்ளனர்.

தங்காலைப் பிரதேசத்தில் தேர்தல் பிர சாரக் கூட்டமொன்றுக்காக பஸ் ஒன்றில் பய ணித்துக் கொண்டிருந்த ஜெனரல் சரத் பொன் சேகாவின் ஆதரவாளர்கள் மீதே இவ்வாறு தாக்குதல் (16ஆம் பக்கம் பார்க்க)



## ஐ.நா.விசேட பிரதிநிதி அல்ஸ்டனின் கருத்துக்கள் சுயாதீனமானவை

### ஐ.நா. செயலர் பான் கீ மூன் தெரிவிப்பு

(நோர்வே)

சட்டவிரோத படுகொலைகள் மற்றும் குற்றச் செயல்கள் தொடர் பான ஐக்கிய நாடுகளின் விசேடப் பிரதிநிதி அண்மையில் இலங்கை தொடர்பில் வெளியிட்டகருத்து சுயாதீனமான கருத்து என ஐ. நா வின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித் துள்ளார்.

சனல் 4 ஊடகத்தினால் வெளி யிடப்பட்ட வீடியோக் காட்சிகள் உண் மை (16ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிக்கட்ட போரில் 27 ஆயிரம் படையினர் பலி

(கொழும்பு)

படையினரின் இறுதிக்கட்ட போர் வெற் றிக்கு 27 ஆயிரம் படைவீரர்கள் உயிரிழந்துள் ளதாக பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

தேர்தல் பரப்புரை யின் போதே இத்தக வலை வெளியிட்டுள்ளார். நாட்டின் அழிவை அல்லது ஆக்கத்தை இத் தேர்தல் நிர்ணயிக் கும் என்றார். (ச-5)

## தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இவ்வாரம் இந்தியா பயணம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதி கள் இந்தவாரத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய மத்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே இந்த விஜயம் இடம்பெறவுள்ள தாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா வுக்கு ஆதரவு வழங்குவதாக உத்தியோக பூர்வ மாக அறிவித்துள்ளமையை அடுத்து இந்த விஜயம் இடம்பெறுவதால் இது முக்கியத்து வம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இந்நிலையில் இந்தியாவுக்கு செல்லும் குழுவில் அடங்கும் பிரதிநிதிகள் குறித்து தக வல்கள் எவையும் வெளியாகவில்லை. இந்திய விஜயத்தின் போது (16ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரப் பகிர்வுடனான அரசியல் தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படும்

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரை

(கொழும்பு)

தமிழ் சிறுபான்மை மக்களுக்கு அதிகா ரப் பகிர்வுடன் கூடிய அரசியல் தீர்வுத் திட்ட மொன்று முன்வைக்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுயாட்சி அதிகாரங்கள் தொடர்பிலான தமி ழர் கோரிக்கைகளுக்கு சாதகமான முறையில் தீர்வுகள் வழங்கப்படும் என அவர் குறிப்பிட் டுள்ளதாக ஏ.எப்.பி செய்தி சேவை தகவல் வெளி யிட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி மக்களின் பொருட்கள் களவு போவதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

வன்னிப் பகுதியில் இடம்பெற்ற போரின் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் பல பொருட்களை படையினர் களவாடியுள்ள தாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா ளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நாடாளுமன்றத்தில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் படையினருக் கும் இடையே இறுதிச் சமர்கள் நடைபெற்ற பகுதிகளில் பொதுமக்கள் கைவிட்டு விட்டு வந்த பொருட்கள் தற்பொழுது களவாடப்படு வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அநுராதபுரம் சிறையிலுள்ள கைதியே கப்பம் கோரும் சம்பவத்தின் சூத்திரதாரி

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறையில் உள்ள கைதி ஒருவரே யாழ்.மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற கப்பம் பெறும் சம்பவத்துடன் தொடர்புடைய குழுவை வழிநடத்தியுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்.மாவட்டத்தில் கடந்த காலங்களில் காணாமல் போனவர்களை மீட்டுத்தருவதாக கூறி குழு ஒன்று தம்மை இராணுவத்தினர் எனத் தெரிவித்து இலட்சக்கணக்கான பணத்தை கப்பமாகப் பெற்று தப்பித்தது.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்களால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் யாழ்.பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகளின் உத்தரவில் யாழ். விஷேட குற்ற விசாரணை பொலிஸ் பிரிவால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இவ் விசாரணையின் பிரகாரம் கப்பம் பெற்ற பணம் வைப்பிலிட்ட வங்கிக் கணக்கின் பிரகாரம் வவுனியாவைச்சேர்ந்த பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டார்.

இதனை விட மேற்குறித்த கப்பம் பெறும் சம்பவத்துடன் ஈடுபட்ட குழுவை வழிநடத்தியவர் பல குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகத் தெரிவித்து அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

இந்நபர் அநுராதபுரம் சிறையில் இருந்தவாறே தொலைபேசியூடாக தம்மை இராணுவ மேஜர் எனத் தெரிவித்து பாதிக்கப்பட்டவர்களிட மிருந்து கப்பம் பெற்றுள்ளார் என விசாரணை களில் தெரியவந்துள்ளது.

(ச-5)



யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த ஜனாதிபதியின் பாரியார் யாழ். ஆயருடன் சந்திப்பில் ஈடுபட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.



யாழ்.பல்கலைக்கழக முகாமை கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முகாமைத்துவ வணிக பீட மாணவர்களால் நேற்று யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு சம்பந்தமான விழிப்புணர்வு நடைபெற்றது. அத்துடன் மாணவர்கள் இரத்ததானம் வழங்கலிலும் ஈடுபட்டார்கள். மாணவர் ஒருவர் இரத்ததானம் வழங்குவதை படத்தில் காணலாம்.

## எழுத்தாளர்களின் பத்திரிகையாளர் மாநாடு

2011ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச தமிழ் எழுத்தாளர் விழா தொடர்பான தகவல்களை தெரிவிப்பதற்கான பத்திரிகையாளர் மாநாடு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.76 அம்மன் ஆலய வீதி, கொக்குவில் கிழக்கில் அமைந்துள்ள சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இப் பத்திரிகையாளர் மாநாட்டில் யாழ். மாவட்டத்தில் வதியும் தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடக வியலாளர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச-3)

## வலி.வட...

செயலர் முரளிதரன் ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ் அறிவிப்பை மக்களுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றத்திற்கான ஆரம்ப பூசை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்றது.

இதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இருந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வரை நீண்டதூரம் நடந்து சென்று மீள்குடியேற்றத்திற்கான ஆரம்ப பூஜையில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் மக்கள் மத்தியில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா நாளை (இன்று) தொடக்கம் தெல்லிப்பழையில் இருந்து கீரிமலைவரையான வீதியில் மக்கள் எவ்வாகனத்திலும் பயணம் செய்யலாம்.

வலி வடக்கு பிரதேச மக்கள் ஓர் இருநாட்களில் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வீடுகளை பார்வையிட்டு துப்புரவு பணிகளை மேற்கொள்ளலாம்.

அப் பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட பின்னர் அவர்களுக்குத் தேவைகள் உதவிகள் கிராம சேவையாளரிடம் தெரிவிக்கப்படும் போது அவை பெற்றுத் தரப்படும் அத்துடன் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் துவிச்சக்கரவண்டி வழங்கப்படும் என அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

(ச-7)

# தகுதிவாய்ந்த அதிகாரியை விலக்கிக்கொள்ள திட்டம்!

## தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசஊடகங்களைகண்காணிப்பதற்காக பெயரிடப்பட்டிருந்த தகுதி வாய்ந்த அதிகாரியை விலக்கிக் கொள்ளப் போவதாக தேர்தல்கள் ஆணையாளர் தயானந்தா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று தம்மை சந்தித்த தேர்தல் கண்காணிப்பாளர்களிடம் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

நீதியானதும் நேர்மையானதுமான தேர்தல் ஒன்றுக்காகவே இந்த முடிபை தாம்மேற்கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் அரசாங்க அதிபரான ஜெயம்பதி ஹெட்டியாராச்சி தகுதி வாய்ந்த அதிகாரியாக பெயரிடப் பட்டிருந்தார்.

எனினும் அவருக்கான உத்தியோகபூர்வ கடிதம் கையளிக்கப் பட்டிருக்கவில்லை.

சட்டத்தின்படி தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவர் நிகழ்ச்சிகளை கட்டுப்படுத்தும் அளவிற்கு அதிகாரத்தை கொண்டிருப்பதுடன் ஊடகத்தத்துவங்களையும் பேணும் கண்காணிப்பை கொண்டிருப்பார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இன்னிசை நிகழ்வு

தைப்பொங்கல் விழாவை முன்னிட்டு தினகரன் நாளிதழின் ஏற்பாட்டில் இலங்கை, தென்னிந்திய கலைஞர்கள் பங்கேற்கும் எம். மோகன்ராஜின் அப்சராஸ் இசைக் குழுவினரின் இன்னிசை நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7.00 மணிக்கு துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. (ச-14)


**பகவத்கீதை சொற்பொழிவு**

இடம்:-இராகவேந்திரா மடாலயம்.

நேரம்:-மாலை 6.30-7.30

சுவாமி வேதாந்த ஆனந்தா வேதாந்த மன்றம்

(C-4204)



**கூறுவிலை கோரல்**

**Bid Number:- NP/DGM/2010/01**

**அலுவலக கட்டிடம்-இலங்கை மின்சாரசபை**

இலங்கை மின்சாரசபை பிரதி பொது முகாமையாளர் வடமாகாண அலுவலகத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் வசதிகள் உடைய ஓர் கட்டிடம் வாடகைக்கு உடனடியாக தேவைப்படுகின்றது.

01. 3000 சதுர மீற்றர் கட்டிடநில விஸ்தீரணம் உடையதாக இருத்தல் வேண்டும்.
02. யாழ். மாநகர எல்லைக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். நீர் வசதி உள்ளதாக, 80 பேர் பாவனை செய்யக் கூடிய மலசல கூட வசதியுள்ளதாக இருத்தல் வேண்டும்.
04. சுமாராக 15 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடியதான இடவசதி உள்ளதாக இருத்தல் வேண்டும்.
05. சுமாராக 30 மோட்டார் சைக்கிள்கள், 25 துவிச்சக்கர வண்டிகள் நிறுத்தி வைக்கக்கூடியதான இடவசதி உள்ளதாக இருத்தல் வேண்டும்.
06. குறைந்தது 5 வருடங்கள் பாவனை செய்யக்கூடியதாக ஒப்பந்தம் செய்வதற்கு விருப்பமாக இருத்தல் வேண்டும்.

மேற்படி வசதிகளை உடைய கட்டிட உரிமையாளர்கள் தங்கள் கூறுவிலைகளைப் பதிவு செய்யப்பட்ட காணி உறுதிப் பிரதிகளுடன் எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு 31.01.2010 பி.ப. 02.00 மணிக்கு முன்னதாக கிடைக்கும்படி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பிரதிப் பொது முகாமையாளர் (வடக்கு)
பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்
இலங்கை மின்சாரசபை,
இல:500, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.


"சூழல் மற்றும் அபிவிருத்தி" வேலைகளிற்கு கை கொடுக்கும் இலங்கை மின்சாரசபை

தொலைபேசி இல: 021- 222 2496, 021 222 3233
தொலைநகல் இல: 021- 222 2497

(C-4206)


# மரண அறிவித்தல்

## ஸ்ரீவத்ஸ தியாகராஜ ஐயர் கணேச சிவசண்முக சர்மா



கொழும்புத்துறையைச் சேர்ந்த ஸ்ரீவத்ஸ தியாகராஜ ஐயர் கணேச சிவசண்முகசர்மா (முன்னாள் பிரதம காசாளர், ஐக்கிய வியாபாரச் சங்கம் யாழ்ப்பாணம், முன்னாள் அர்ச்சகர் நல்லூர் சிவன் கோவில்) அவர்கள் நேற்றுமுன்தினம் (11.01.2010) திங்கட்கிழமை தமது 76ஆவது வயதில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் அமரர் தியாகராஜ ஐயர், அமரர் இராஜேஸ்வரி அம்மா தம்பதியரின் அன்பு மகனும், அமரர் இரத்தினசபாபதிக்குருக்கள்-அமரர் புவனேஸ்வரி அம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், சௌந்தராதேவியின் பாசமிகு கணவரும், சண்முகானந்தசர்மா, சிவகுமார சர்மா, சியாமளாதேவி பாலசுப்பிரமணியக் குருக்கள், இராமேஸ்வர சர்மா (அமரர்), ரமாராணி, சங்கராஜக்குருக்கள் ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலாதேவி, பிறேமாவதி, சரவணபவசர்மா, நாகேஸ்வரி, சாந்தி, உமாபதி சர்மா (அமரர்), சுகுமாரி, சரஸ்வதி அம்மா(அமரர்)-சாம்பசிவ ஐயர் (அமரர்), பாலாம்பிகை அம்மா (அமரர்)-சிவராஜ ஐயர்(அமரர்), சுப்பிரமணியக்குருக்கள் (அமரர்), அமிர்தகுணவல்லி அம்மா, தங்கசாமி சர்மா (அமரர்)-அன்னபூரணி(அமரர்), கணேசசர்மா(அமரர்)-இராஜலஷ்மி, ஜெகதீஸ்வரி-வரதராஜசர்மா, குமாரசாமிக்குருக்கள்-பரமேஸ்வரி (அமரர்)ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருஷ்ணராஜா (முகாமையாளர் ஏசியன் பெயின்ற்ஸ் (லங்கா) லிமிட்டற் யாழ்.விநியோக நிலையம், யாழ்ப்பாண இரும்பகம்), சசிகலாதேவி, மனோரஞ்சிதம், பாலசரஸ்வதி, அனுராதா, மீனலோஜினி, இராஜேஸ்வரி (ஆசிரியை, சத்தியசாயி பாடசாலை மானிப்பாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இந்திராணி (ஆசிரியை, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), ஸ்ரீதரசர்மா (ஓய்வூதியர் இலங்கை வங்கி), முத்துச்சாமிக்குருக்கள் (பிரதம குரு, உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி தேவஸ்தானம்), இராமச்சந்திரசர்மா (அமரர்), முரளிதரக் குருக்கள் (பிரதமகுரு அரியாலை சித்திவிநாயகர் தேவஸ்தானம்), சுந்தரேஸ்வரசர்மா (பிரதமகுரு மாதகல் பாணாகவெட்டி புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானம், முன்னாள் உத்தியோகத்தர் இ.போ.ச.காரைநகர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் கி.யாதவராஜன் (மாணவன் பொறியியல்பீடம் பேராதனை பல்கலைக்கழகம்), கி.பார்க்கவன் (மாணவன் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ஸ்ரீ.கலாதரன் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் கூ.அ.உ.ஆணையாளர் அலுவலகம்)-க.பிரவீனா (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம் நல்லூர்), ஸ்ரீ.ரிஷிகேசன் (முகாமைத்துவ உதவியாளர் யாழ்.மாவட்ட செயலகம்)-ரி.சிந்துஜா (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச சபை மானிப்பாய்), ச.காயத்திரி (முகாமைத்துவ உதவியாளர், மீள் குடியேற்ற அலுவல்கள் அமைச்சு கொழும்பு)-வா.சக்திதரன்(உதவி முகாமையாளர் யூனியன் வங்கி கொழும்பு), மு.சிவகோசரன் (கணனிப் பொறியியலாளர் ஸீ லாப் நிறுவனம் வெள்ளவத்தை)-சி.ஸ்ரீபத்மப்பிரியா (பயிலுநர் ஆசிரியை மஹரகம), மு.இரகுநாதன் (உத்தியோகத்தர் ஏசியன் பெயின்ற்ஸஸ் (லங்கா)லிமிட்டற் யாழ்.விநியோக நிலையம் யாழ்ப்பாணம் இரும்பகம்), மு.ஜெகநாதன் (அர்ச்சகர் உடுவில் மீனாட்சி சுந்தரேஸ்வரசுவாமி தேவஸ்தானம்), இ.வைஷ்ணவி (மாணவி யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இ.பார்த்திபன் (மாணவன் யா/உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை), மு.ஸ்ரீவித்தியா (மாணவி யாழ்.உயர்தொழில் நுட்பவியல் நிறுவனம்), மு.ஸ்ரீபிரணவரூபன் (மாணவன் யா/பரி.யோவான் கல்லூரி), சு.பூர்வஜா (மாணவி யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேரனும், க.பூஜிதா, ச.அக்ஷரன், ச.அக்ஷிகா, சி.சுபனேஷனன், சி.சாருஜன் ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.01.2010 திங்கட்கிழமை இல.27/4, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம் எனும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்.

(347)

# இன்று ஒரு தகவல்

## கடவுளுக்கு மரியாதை

ஒருத்தர் வெளியூருக்குப் போய் அழகான ஆண்டவன் சிலையொன்றை வாங்கிக் கொண்டுவந்தார்.

அவரது வீட்டுக்கு முன்புறத்திலேயே ஒருகோயில் மாதிரி கட்டி அதற்குள் அந்தச் சிலையை வைத்தார்.

தினமும் அதற்கு முன்னாள் போய்நின்று வழிபாடு செய்வது வழக்கம்.

கொஞ்ச நாட்களில் அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் அங்குவந்து சாமி கும்பிட ஆரம்பித்தார்கள்.

ஒரு நாள் இவர் அந்தச் சிலையை எடுத்துத் துடைக்கும்போது அது தவறிக் கீழே விழுந்துவிட்டது. ஒரு கை உடைந்துவிட்டது. என்ன செய்வதென்று யோசித்தார்.

சரி, பரவாயில்லை என்று சொல்லிவிட்டு அந்தச் சிலைலைத் தூக்கிப்போட்டுவிட்டார்.

பின் அதே ஊருக்குப்போய் இன்னொரு சிலை வாங்கிக் கொண்டுவந்து பழைய இடத்தில் வைத்தார்.

பழையபடி எல்லோரும் தினமும் சாமி கும்பிட ஆரம்பித்தார்கள். கை உடைந்த சிலையை அதன்பின் திரும்பிப் பார்ப்பதேயில்லை. இது ஒருவிதமான பக்தி.

இதுபோல் பக்தர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய செய்தி ஒன்று உண்டு.

இது சுமார் நூற்றைம்பது வருடங்களுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சி.

ஒரு கோயிலில் ஓர் அர்ச்சகர் இருந்தார்.

அந்தக் கோயிலில் தினமும் ஒரு வழக்கம்.

அதாவது இரவுவேளையில் இறைவனின் விக்கிரகத்தை எடுத்துப் படுக்கையில் சயனிக்க வைத்து விடுவது வழக்கம்.

ஒரு நாள் இரவு அவர் அந்த விக்கிரகத்தை எடுத்துக் கொண்டு மெதுவாகப்போகும்போது கால் வழுக்கிக் கீழே விழுந்துவிட்டார். அவருக்கு காலில் ஒன்றும் ஆகவில்லை.

ஆனால் அந்த சிலையின் ஒரு கை உடைந்துவிட்டது. அவர் பதறிப்போனார்.

மறுநாள் அங்கே இருந்தவர்கள் சொன்னார்கள்.

''சிதிலமுற்ற சிலையை வழிபடக்கூடாது. அதனால் வேறொரு சிலையைச் செய்து இங்கே கொண்டு வந்து வைத்துவிடலாம்'' என்றார்கள்.

இருந்தாலும் அச்சகர் யோசித்தார்.

ஒரு பெரியவரிடம் போய் ஆலோசனை கேட்டார். நடந்த விபரத்தைச் சொன்னார். அதற்கு அந்தப் பெரியவர்

''தம்பி இங்கே வா உன்னுடைய மருமகனுக்கு கை உடைந்தால் என்ன செய்வாய்? உடனே அவரைத் தூக்கி கங்கையில் வீசிவிடுவாயா? அப்படிச் செய்துவிட்டு உன் பெண்ணுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைப்பாயா?'' என்று கேட்டார். வந்தவர் தலையைச் சொறிந்தார்.

பெரியவர் சொன்னார்.

''உன் சொந்த உறவினருக்கு எப்படிச் செய்வாயோ அப்படித்தான் இறைவனுக்கும் செய்ய வேண்டும்'' என்றார்.

''அப்படியென்றால்...?''

''அந்தச்சிலையை சரி செய்து வழிபடுவதுதான் முறை'' என்றார்.

அர்ச்சகர் தெளிவோடு திரும்பிச் சென்றார்.

இந்த யோசனையைச் சொன்னவர் யார் தெரியுமா? அவர்தான் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர். உருவமில்லாத இறைவனுக்கு உருவத்தை உண்டுபண்ணி மரியாதை செய்ய ஆரம்பிக்கிற மனிதன்... அந்த உருவத்தின் ஒருகை உடைந்துவிட்டால்... அந்த மரியாதையைக் குறைத்துக் கொள்கிறான்.

அப்படியானால் இறைத்தன்மை இதுவரைக்கும் அந்தச் சிலையின் கையிலா இருந்தது?

தன்னையே இன்னொரு இடத்தில் தேடித் தடுமாறும் மனிதர்களுக்கு இதெல்லாம் இயல்புதான்.

நம்ம ஆள் ஒருத்தன் கையில் கட்டுப்போட்டு... அதை இழுத்துத் தோளில் மாட்டிக்கொண்டு நடந்துவந்து கொண்டிருந்தான்.

''என்னடா ஆச்சு'' என்று கேட்டார்கள்.

''ஏற்கனவே கை உடைந்துபோன ஒரு சாமி சிலையைத் திருடிக் கொண்டு வந்தேன். அதனுடைய பலன் தான் இது'' என்றான்.

''அப்படியானால் இது சாமி கொடுத்த தண்டனையா?''

''இல்லை... பொலிஸ் கொடுத்த தண்டனை!''

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பண்பாட்டின் ஆத்மாவாக மரபார்ந்த கலைகள் உள்ளன

## பேராசிரியர் என். சண்முகலிங்கன்



(யாழ்ப்பாணம்)

மரபார்ந்த கலைகளை காப்பதால் பண்பாட்டின் ஆத்மா வாழ்கின்றது என்று *பாஷையூரும் நாட்டுக்கூத்தும்* நூல் வெளியீட்டில் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்தார்.

மேலும் பண்பாட்டின் ஆத்மாவாக மரபார்ந்த கலைகள் உள்ளன. நவீனத்துவ உலகமயமாக்க கலைகளைத் தாண்டி எங்கள் பண்பாட்டின் இருப்புக்கும் மேன்மைக்கும் மரவு வழி கலைகள் உறுதுணையாகின்றன.

பாஷையூர் கிராமத்து நாட்டுக்கூத்து வரலாற்றையும் வாழ்வையும் பேசும் சிங்கராஜா ஆசிரியரின் நூல் எங்கள் பண்பாட்டின் ஆத்மாவைக் காத்து வருங்கால சந்ததிக்கு தருகின்றது.

இந்த சமூக கடமையை நிறைவேற்றும் சிங்கராஜா ஆசிரியர் பணி போற்றுதற்குரியது.

பாஷையூர் சென் அன்ரனீஸ் மகளிர் வித்தியாலயத்தில் கவிஞர் நீசா பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற ஆசிரியர் சிங்கராஜாவின் *பாஷையூரும் நாட்டுக்கூத்தும்* நூல் வெளியீட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

எங்கள் கலை வரலாற்றினை எழுதுவதில் சமூக வரலாற்றினை கட்டமைப்பதில் இவ்வாறான நூல்கள் பெறுமதியான பங்களிப்பினை செய்கின்றன.

நாட்டுக்கூத்து கலையானது தமிழ்ப் பண்பாட்டு தனித்துவத்தின் அடையாளமாகவுள்ளது. இக்கலை வழியாக எங்கள் பண்பாட்டு விழுமியங்கள் பேணப்பட்டும் கையளிக்கப்பட்டும் வருகின்றன.

நவீன இலத்திரனியல் ஊடகங்களின் முனைப்பில் இம் மரபுக் கலை வடிவங்கள் விழுங்கப்படாமல் இந்த ஊடகங்களின் வழியாகவும் வல்லமையான எம் கலை மரபுகளைக் காக்கும் ஏற்பாடுகளை நாம் காணவேண்டியது அவசியமாகும் என்றார். (2-6)

## உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

இதில் பாடத் திட்டமிடல், பாடக் குறிப்பு சம்பந்தமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து உள்ளகப்பயிற்சி ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார். (6)

# இராசி பலன்

*13-01-2010*
*(மார்கழி 29 புதன்கிழமை)*
*திரயோதசி முற்பகல் 9.44 மணிவரை*
*மூலம் பின்னிரவு 2.17 மணிவரை*
*இராகுகாலம் 12.33 - 2.03 மணிவரை*
*சுபநேரம் 5.03 -6.33 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | ஆன்றோர் சந்திப்பு, புதிய திட்டமிடல், திடீர் பயணம், அதிக செலவு. |
| இடபம் | காரிய தடங்கல், வீண் பகை, வாகன பயம், போசன சுகம். |
| மிதுனம் | குடும்ப நன்மை, காரிய அனுகூலம், விருந்துபசாரம், பொருள் சேர்க்கை. |
| கடகம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், புத்துணர்ச்சி, நல்ல செய்தி, போசன நன்மை. |
| சிங்கம் | ரோக நிலை, எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம், கௌரவக்குறைவு. |
| கன்னி | மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், தாய்வழி உறவு, தனவிரயம். |
| துலாம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், சுவாரஸ்யம், தன்னம்பிக்கை, பொருள் சேர்க்கை. |
| விருச்சிகம் | கடின வார்த்தை, ஆரோக்கியக் குறைவு, முயற்சி தாமதம், போசன சுகக்குறைவு. |
| தனுசு | மனக்கிலேசம், உறவினர் வருகை, முயற்சி பலிதம், தெய்வ சிந்தை. |
| மகரம் | சயன சுகக்குறைவு, சுபசெலவு, முயற்சி தாமதம், வீண் பகை. |
| கும்பம் | எடுத்த காரியம் கைகூடும், பெருமையடைதல், சகோதரர் உதவி, போசன நன்மை. |
| மீனம் | அதிகாரம், கலந்துரையாடல், முயற்சி கைகூடும், சுபநிகழ்வு. |

வளவன்

# வடமராட்சி வலய

## பாடசாலை மாணவர்களிற்கிடையே நடத்தப்பட்ட ஓட்டப்போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஊர் சுற்றுப் போட்டியின் ஓர் பகுதியாக வடமராட்சி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட ஓட்டப் போட்டியில் வெற்றிபெற்றவர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் பத்து இடங்களைப் பெறும் மாணவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**ஆண்கள் 5 கிலோ மீற்றர் ஓட்டம்**

பி. தர்சன் (இமையாணன் வித்தி), கே. அமுதசுதன் (நெல்லியடி மத்திய மகா வித்தி), எஸ். ஸ்ரீகரன் (கரணவாய் மத்திய மகா வித்தி), எஸ். வினுஜனன் (தேவரையாளி இந்துக் கல்லூரி), கே. கோகுலன் (அல்வாய் ஸ்ரீலங்கா வித்தி), எஸ். ரஜீவ்குமார் (விக்னேஸ்வரா வித்தி, கே. ரெஜித் (தேவரையாளி இந்துக் கல்லூரி), ஆர். கிருபாகரன் (நெல்லியடி மத்திய மகா வித்தி), எம். விமல்ரா, எம். சிவமோகன் (உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி).

**பெண்கள் 3 கிலோ மீற்றர் ஓட்டம்**

ம. தர்மினி, யோ. துர்க்கா (நெல்லியடி மத்தி மகா வித்தி), ர. நளாயினி (மெதடிஸ் பெண்கள் கல்லூரி), சே. லாவண்யா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ப. மேரி லிப்பின் (சென் தோமஸ் வித்தி), கி. லக்ஸ்னா, சி. கீர்த்தனா (மெதடிஸ் பெண்கள் கல்லூரி), கி. சாதுரியா, ம. பிரவீனா (அல்வாய் ஸ்ரீலங்கா வித்தி), சி. வினோதினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி). (6-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 180 | 140 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 220 |
| தக்காளி | 150 | 160 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 60 | 80 | 80 |
| கரட் | 120 | 130 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 100 | 120 | 70 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 110 | 110 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 220 | 240 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 70 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 170 | 180 | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 150 | 160 | -- |
| கறிமிளகாய் | 200 | 220 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 140 | 120 |
| கத்தரி தம்புள்ள | 120 | 140 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 90 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 |

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வலய கல்வி அலுவலக முதன்மை ஆசிரியர், உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கல்வி அபிவிருத்தி சார்ந்த கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். வலய கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (6-30)

## தைப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தைப்பொங்கல் விழா வெகு விமரிசையாக கொண்டாடப்படவுள்ளது. காலையில் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள வித்தக விநாயகர் ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை முகிழ்நிலை ஆசிரியர்களினால் பொங்கல் பண்டிகையும் மாலை 4 மணிக்கு கல்லூரி கலை அரங்கில் மன்றத்தலைவர் ம.தனேஸ்வரன் தலைமையில் கலாசார விழாவும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூகசேவைகள் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள், கோப்பாய் பிரதேச பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பெரியோர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ். கல்வியியற் கல்லூரி சமூகம் அழைப்பதாக கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார். (6)

## சிறுவர்களின் ஒன்றுகூடலும் உதவி வழங்கும் நிகழ்வும்

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய இயக்குநர் சபையினால் நடத்தப்படும் சிறுவர்களின் ஒன்றுகூடல் மற்றும் உதவி வழங்கல் நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட செயலக திட்ட பணிப்பாளர் திருமதி என். மோகனேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ. அகிலதாஸ், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் வ. ஸ்ரீகாந்தன், ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலய அதிபர் க. சுப்பிரமணியம், யோகிராஜன், சொண்ட் நிறுவன திட்டப் பணிப்பாளர் க. செந்தூரன், தியாகி அறக்கொடை நிறுவன செயலாளர் செ. கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறுவர்களின் முன்னேற்றத்தில் பங்கு கொள்ள ஆர்வமுடைய அனைவரும் இதில் கலந்து கொள்ளலாம் என சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலைய இயக்குநர் சபையினர் அழைக்கின்றனர். (6-4)

## குடும்ப சேமிப்பு தினம்

(அல்வாய்)

சாவகச்சேரி ஹற்றன் நசனல் வங்கியில் குடும்ப சேமிப்பு தினம் எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9 மணிமுதல் 12 மணி வரை நடைபெறவுள்ளது.

குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறும் அன்று கணக்கு ஆரம்பித்தால் விசேட பரிசு வழங்கப்படும் என்றும் மேலும் கணக்கு உள்ளவர்க்கும் பரிசில்கள் வழங்கப்படும் எனவும் வங்கி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (2- 29)

## சுனாமி ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான கொடுப்பனவுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியானது சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெற்றோரில் ஒருவரை இழந்த சிறார்களின் எதிர்கால வாழ்வை மேம்படுத்தும் முகமாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயற்திட்டம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து பணம் மற்றும் வேறு உதவிகளையும் செய்யத் திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக ஒரு தொகை சிறார்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ந. சிவரட்ணம் தலைமையில் உதவிப் பொது முகாமையாளர் அலுவலகத்தில் நடைபெறும் வைபவத்தில் பயனடையவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு சபை அநுராதபுரக்கிளை உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (6-4)




## நவாலி - வழுக்கையாற்றுப் பகுதியில் குப்பை கூழங்களால் சுகாதார சீர்கேடு

(பொன்னாலை)

நவாலி வீதி - வழுக்கையாற்றுப் பகுதியில் குப்பை கூழங்கள் மற்றும் விலங்குக் கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதாரச் சீர்கேடும் நிலவுவதாக வீதியால் செல்வோர் தெரிவிக்கின்றனர்.

அயல் பிரதேசங்களில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் தமது வீடுகளில் அன்றாடம் சேரும் குப்பை கூழங்களையும் தமது பண்ணைகள் மற்றும் சொந்தத் தேவைகளுக்காக அன்றாடம் வெட்டும் விலங்குகளின் கழிவுகளையும் குறித்த பகுதியில் வீசுவதால் அப்பகுதியில் கடும் துர்நாற்றம் வீசுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொறுப்புணர்வற்ற முறையில் இவ்வாறு நடந்து கொள்ளும் நடத்தைகளைக் கண்டு உரிய நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டுமென்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (6-49)

## அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் (வடலியம்மன்) நாளை வியாழக்கிழமை முதன்முறையாக அபிராமி பட்டர் விழா நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 3 மணிக்கு அபிஷேகம், பூசைகளைத் தொடர்ந்து அபிராமி அந்தாதி இசைக்கப்படுவதுடன் அபிராமிபட்டர் விழாவும் உற்சவமும் இடம் பெறவுள்ளது. (2-4)

## இந்து மாமன்றத்தினர் வழங்கும் வலுவிழந்தோருக்கான முச்சக்கரவண்டிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றம் தற்போது யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அவயங்களை இழந்தவர்களுக்கு, வலுவிழந்தோருக்கான முச்சக்கர வண்டிகளை வழங்கவுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள இந்து மாமன்ற அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இவ் முச்சக்கரவண்டியை பெறுவதற்கு தகுதியுடையவர்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள இந்து மாமன்ற அலுவலகத்தில் பதிவுகளை மேற் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

## டெங்கினைத் தடுக்கும் 'தெருக்கூத்து'

(யாழ்ப்பாணம்)

டெங்கு நோய் அதிகமாகப் பரவி வரும் இந்நாட்களில் யாழ்ப்பாணத்தில் மிக அதிகமாக டெங்கு பரவி வரும் பிரதேசமான உடுவில், சண்டிலிப்பாய், சாவகச்சேரி, காரைநகர், பருத்தித்துறை, யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இடங்களிலுள்ள கிராமங்களில் உள்ள வடிகால், குளம் குட்டைகள், பாவனையற்ற வீடுவளவுகள், பாவிக்கப்படாத நிலங்கள், பற்றைகள், போத்தல்கள், ரயர்கள், பாத்திரங்கள், சிரட்டைகள் நீண்ட நாட்களுக்கு உரிய முறையில் அகற்றப்படாத குப்பைகள் போன்ற இடங்களிலும் சிறப்பாக வாழக் கூடிய டெங்கு நுளம்பை கட்டுப்படுத்துவதற்காக இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ். மாவட்டக் கிளைத் தொண்டர்களால் துண்டுப் பிரசுரம் வழங்கியும், தெருக்கூத்துக்களையும் பல இடங்கள் தோறும் நடத்தி வருகிறது.

மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி டெங்கு நுளம்பு ஒழிப்பில் மக்களை முக்கிய பங்குதாரராக அமைப்பது அவசியமாகும்.

இதனால் செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளை டெங்கு ஒழிப்புத் திட்டத்தை தெருக்கூத்து ஒன்றின் மூலம் மக்களுக்கு அரங்கேற்றி வருகிறது.

இதற்கமைய இத் தெருக்கூத்தினை தங்கள் பகுதியில் நடத்த விரும்புவோர் இலங்கை செஞ்சிலுவைச்சங்கம், இல. 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு சங்கம் கேட்டுள்ளது. (2)

## கலந்துரையாடல் செயற்திட்டம்

(அல்வாய்)

'நம்நாட்டிற்காக நாட்டின் மேம்பாட்டுக்காக' என்னும் தொனிப்பொருளில் நாட்டை பற்றிய நேர்சிந்தனையை உருவாக்குவதற்கான பாடசாலை கலந்துரையாடல் செயற்திட்டம் அண்மையில் சகல மாகாணங்களிலும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள சகல கோட்ட மட்டத்திலான தரம் 1 I, IC தரம் II ஆகிய பாடசாலைகளுக்கிடையே போட்டிகளை நடத்தி அவற்றில் ஒரு பாடசாலையை தெரிவு செய்து எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு சகல வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார். (4-19)

## தைப்பொங்கல் திருப்பலி

(ஊர்காவற்றுறை)

தமிழர் திருநாள் தைப்பொங்கல் திருப்பலி நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு ஊர்காவற்றுறை பங்கில் நடைபெறவுள்ளதாக பங்குத்தந்தை தெரிவித்துள்ளார். (6-72)



வலி கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் வருடாந்த ஒன்றுகூடல் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதேச செயலர் கிறிஸ்தோபர் அன்ரன் மோகன்ராஸ் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் பட்டிமன்ற நிகழ்வில் உத்தியோகத்தர் அ. ஜேசுதாஸ் பட்டிமன்ற விடயம் பற்றி உரைநிகழ்த்துவதையும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி எஸ். கல்பனா பாடல் இசைப்பதையும் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்களையும் படங்களில் காணலாம்.


# நாயக்கர் கால சிற்பக்கலை

102


### மதுரை கோயிற் சிற்பங்கள்

பரத கண்டத்திலே கட்டடக்கலை வரலாற்றிலே தனிச் சிறப்புடன் விளங்குகின்ற மதுரைக் கோயில் சிற்பக்கலை வரலாற்றை பொறுத்தவரையிலும் முதன்மைத் தலமாக விளங்குகின்றது. அங்கு போல வேறு எங்கும் பெருந்தொகையான சிற்பங்களை காண முடிவதில்லை. சோழர் காலச் சிற்பக் கலையைப் பொறுத்தவரையில் வெண்கலப் படிமங்களைப் பற்றிச் சிந்திக்கின்றோம். கற்சிற்பங்களைப் பொறுத்த வரையில் மூலவர் படிமங்களும் விமானத்தின் சுவர்ப்புறங்களில்

மதுரை கோயிற் சிற்பங்கள்



அமைந்த சிற்பங்களும் அதிகப் பிரசித் தமானவை. ஆனால் நாயக்கர் காலத்தைப் பொறுத்த வரையில் கோயில் மண்டபங்கள் எல்லாம் சிற்பக் கலைக் கூடங்களாக விளங்குகின்றன. ஆயிரங்கால் மண்டபம், கல்யாண மண்டபம், திருச்சுற்று மாளிகை முதலான அமைப்புக்களில் எல்லாம் ஆயிரக்கணக்கான பிரமாண்டமான தூண்கள் அமைந்திருக்கின்றன. அவற்றிலே பல்லாயிரக் கணக்கான சிற்பங்கள் வடிக்கப்பட்டுள்ளன. மதுரைக் கோயிற் கடவுட் படிமங்களும் மன்னர்களதும் பிரதானிகளதும் உருவங்களும் பெரும் தொகையில் அமைக்கப்பட்டுள்ளன. கடவுட் படிமங்கள் ஆகமப் பிரகாரமானவை. சிற்ப நூல்களிலே சொல்லப்படுகின்ற பிரதிமால க்ஷணங்களுக்கு அமைய அவை



திருக்கல்யாணம்

உருவாக் கப்பட்டுள்ளன. திருவிளையாடற் புராணம், ஹாலஸ்ய மகாத்மியம், சிவபுராணங்கள் முதலியவற்றிலே சொல்லப் படுகின்ற கதைகளுக்கு விளக்கமான சிற்பங்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. மதுரையிலே தூண்களுக்கும் கட்டங்களுக்கும் பயன்படுத்தப் பட்ட கருங்கல் மிகவும் கருமையானது. கருங்காலி போன்ற தோற்றமுடையது. உளிகளினாலே செதுக்கப்படுமிடத்து மெழுகு பூசினாற்போல் பளபளப்பாக மினுங்கும் தன்மை கொண்டது. அங்கே விஜயநகர நாயக்கர் காலக் கலைஞர்கள் உன்னதமான சிற்பங் களை வடித்துள்ளனர். தமிழகத்திலே சிற்பக் கலை வளர்ச்சி நாயக்கர் காலத்தில் முதிர்ச்சி நிலை அடைந்தது. பொதுவாக உருவங்கள் பிரமாண்டமானவை, மிகுந்த வனப்புடை யவை, தனிச்சிறப்புடைய ஒரு கலைப் பாணியின் அம்சங்களைப் பிரதிபலிக்கும் பான்மை கொண்டவை, சோழர்காலச் சிற்பங்களோடு ஒப்பிடுமிடத்து அவை கனதியான தோற்றங் கொண்டவை. மதுரைக் கோயிலிலுள்ள சிற்பங்களைச் கடவுட் படிமங்கள் உருவச் சிற்பங்கள் என இரண்டு பிரதான வகையினவாக வகுத்து நோக்கலாம். விமானங்களிலும் கோபுரங்களிலும் அமைந்திருக்கும் சிற்பங்கள் வேறொரு வகைக்குரியனவாகும். மண்டபங்களிலும் அவற்றிலுள்ள தூண்களிலும் அமைந்திருக்கும் வடிவங்களே இங்கு வர்ணிக்கப்படுகின்றன.

### கடவுட் படிமங்கள்


#### 1. திருக்கல்யாணம்

கம்பத்தடி மண்டபத்தில் உள்ள தூண் ஒன்றிலே மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் சிற்பக் கோலத் தில் அமைக்கப்பட்டுள்ளது. அதனைப் போல் புது மண்டபத்திலும் ஒரு சிற்பம் அமைந்திருக்கின்றது. அதிலே நின்ற கோலத்தில் சிவன் வலக்கரத்தால் மீனாக்ஷியின் வலது கையைப் பற்றி நிற்கும் கோலம் தெரிகின்றது. இடப்பக்கத்திலே திருமால் தாரை வார்த்து கன்னிகாதானம் செய்யுங்காட்சிஅமைந்திருக்கின்றது. அவர்களுக்குப் பின்னால் மரத்தின் உருவம் தெரிகின்றது. இந்திரனால் மீனாக்ஷிக்கு வழங்கப்பட்ட கற்பகதருவே அதுவாகும். இவர்களுக்குச் சமீபத்திலே பிரமன் புரோகிதராக இருந்து ஓமம் வளர்க்கும் காட்சி தெரிகின்றது. பக்கத்திலே பெண்கள் இருவரின் உருவங்கள் தெரிகின்றது. பிரதிமாலக்ஷணங்கள்எல் லாம் ஆகமப் பிரகாரமானவை. புது மண்டத்திலுள்ள சிற்பம் பதினேழாம் நூற்றாண்டில் உருவாக்கப் பெற்றது. கம்பத்தடி மண்டபத்துச் சிற்பம் 1870 இல் வடிக்கப் பெற்றது. இரண்டும் ஒரே பாணியில் அமைந்தவை. மணமக்களின் முகபாவமும் அங்கலக்ஷணங்களும் இணையிலாத வகையிலே சித் தரிக்கப் பெற்றுள்ளமை கவனித்தக்கத்தது.

#### 2. திரிபுராந்தகர்

திரிபுராந்தகரின் உருவங்கள் பல இடங்களில் உள்ளன. புது மண்டபத்தில் இரு வடிவங்கள் காணப்படுகின்றன. ஆயிரங்கால் மண்டபத்தில் ஒன்றும் கம்பத்தடி மண்டபத் தில் ஒன்றும் உள்ளன. முப்புரங்களைச் சிவன் அழித்த காட்சியைத் திரிபுராந்தகர் வடிவம் குறிக்கின்றது. வேதத்திலே சம்ஹிதை, பிராமணம் ஆகிய பகுதிகளிலே திரிபுரதகனம் பற்றிக் குறிப்புகள் உள்ளன. மகாபாரத்திலே கர்ண பருவத்தில் அதனைப் பற்றிய வர்ணனை காணப்படுகின்றது. திரிபுராந்தகரின் எட்டு வடிவங்கள் பற்றிச் சொல்லப்படுகின்றது. கம்பத்தடி மண்டபத்திலுள் உருவத்திலே சிவன் இரதத்திலே மேற்செல்லுங்காட்சி அமைந்திருக்கின்றது. வலதுகால் இரதத்தின் பாகத்திலே அமைந்திருக்கின்றது. இடதுகால் முன்னால் ஊன்றிய கோலத்திற் தெரிகின்றது. சாரதியாகப் பிரமா வந்திருக்கின்றார். விஷ்ணு, அக்கினி , யமன்,சாவித்திரி முதலிய தேவர்கள் படைக் கலங்களாக வடிவெடுத்துள்ளனர்.

புது மண்டபத்திலுள்ள திரிபுராந்தகர் வடிவம் வேலைப்பாட்டில் முன்னையதைக் காட்டிலுஞ் சிறந்ததாகும். உருவத்தின் எல்லா அம்சங்களும் செம்மையாகவும் ஒளிமிளிரும் வண்ணமாகவும் செதுக்கப்பட்டுள்ளன. அங்குள்ள சிற்பத்தில் இரதம் காணப்படவில்லை. சிவனுடைய உருவம் பீடம் ஒன்றிலே அமைந்து காணப்படுகின்றது. சிவனுடைய உருவத்தின் கீழே கணேசரின் வடிவம் தெரிகின்றது. ஆயிரங்கால் மண்டபத்திலுள்ள திரிபுராந்தகரின் வடிவம் அதிக சிறப் புடையதாகும். அது விநாயகர் , பாண்டியராசன் ஆகியோரின் உருவங்களுக்கிடையே காணப்படுகின்றது. உருவத்தின் அங்கலக்ஷணங்கள் மிகுந்த வனப்புடன் விளங்குகின்றன. அது கம்பீரமான தோற்றத்துடன் உயிரோட்டமான கோலத்துடன் காணப்படுகின்றது. அம்பிலே, திருமாலுடைய வடிவம் மிகவும் நுட்பமான முறையிலே செதுக்



நடராஜர் வடிவம்

கப்பட்டுள்ளது.

#### 3.உமாசகித மூர்த்தி

உமாதேவியாரும் ஈஸ்வரரும் ஆசனக் கோலத்தில் அமைந்திருக்கும் காட்சி இதிலே விளங்குகின்றது. உமாதேவியாரின் உருவம் இறைவனின் இடப்பக்கத்தில் உள்ளது. அம்மனின் வலது கால் மடித்தும் இடது கால் மடித்துக் கீழ் நோக்கித் தொங்கும் நிலையிலும் காணப்படுகின்றன. திருக்கல்யாணத்திற்குப் பின்பு அடியார்களுக்கு காட்சி கொடுத்த நிலை இதுவாகும். இரண்டு சிற்பங்களும் ஒரே தூணில் அமைந்திருக்கின்றன.

#### 4.சுகாசனக்கோலம்

கம்பத்தடி மண்டபத்திலே அடுத்துள்ள தூணிலே சுகாசனக் கோலமும் காகரமூர்த்தியின் வடிவமும் அமைக்கப்பட்டுள்ளன. சுகாசனக்கோலத்தில் இறைவனும் தேவியும் ஆசனக் கோலமாய் உள்ளனர். முன் வலக்கரம் அபயகரமாகும். பின் வலக்கரத்தில் அக்ஷமாலை காணப்படுகின்றது. முன் இடக்கரம் வரதகரமானது. அதன் பின் உள்ள கரம் சூலம் ஏந்திய கோலத்தில் அமைந்துள்ளது. சிவனுடைய வலது கால் மடித்துக் கீழ் நோக்கித் தொங்கும் நிலையில் அமைந்துள்ளது. அம்மனின் வலக்கரம் மலர் ஏந்திய கோலத்தில் உள்ளது. இடது கை பீடத்தில் அமைந்துள்ளது. இடது கால் பீடத்திலே தொங்கிய வண்ணமாய் உள்ளது. சிவனது இடது கால் அம்மனின் வலது கால் மேற்படிந்திருக்கின்றது.

#### 5.காலகரமூர்த்தி

இது மார்க்கண்டேயருக்கு சிவபெரு மான் அபயம் அளித்த கதையை விளக்கும் சிற்பமாகும். சிவனடியார்களின் உத்த மோத் தரமான மார்க்கண்டேயர் 16 வயது அடை ந்த தும் இறக்க நேரிடும் என்று சொல்லப்பட்டது. சமயம் வந்ததும் அவரு டைய உயிரைக் கொல்வதற்கு எமராசன் வந் தான். தன்னைக் காத்தருளச் சிவபெரு மானைமார்க்கண்டேயர் இறைஞ்சி வேண்டினார். சிவ லிங்கத்தை கட்டிப்பிடித்தார். அதில் இருந்து தோன்றிய இறைவன் காலனை அடக்கி . மார்க்கண்டேயருக்கு அபயம் அளித் தார்.

சூலம் ஏந்திய கோலத்தில் சிவன் எமராசனை அடக்கும் காட்சி இதிலே வடிவமைக்கப்பட்டுள்ளது. முன் வலக்கரத்தில் மழுவும் பின் வலக்கரத்தில் சூலமும் காணப்படுகின்றன. முன் இடக்கரத்தில் கபாலமும் அதன் பின்னுள்ள கரத்திலே மானும் தெரிகின்றன. வலது கால் பீடத்தை ஊன்றிய வண்ணமாய் உள்ளது. இடதுகால் காலனின் கழுத்தினை ஊன்றிய கோலத்திற் காணப்படுகின்றது. இலிங்கத்தின் மறுபுறத்திலே மார்க்கண்டேயரின் வடிவம் அதனைச் கட்டிப்பிடித்த கோலத்தில் தெரிகிறது.

#### 6. நடராஜர் வடிவம்

கம்பத்தடி மண்டபத்து மூன்றாவது தூணிலே ஆடவல்லானின் உருவம் அமைந்திருக்கின்றது. வெள்ளியம்பலத்திலும் நாயக்க மண்டபத்திலும் ஆயிரங்கால் மண்டபத்திலும் அளவிலே பெரிய நடராஜர் வடிவங்கள் அமைந்துள்ளன. மீனாட்சி சுந்ரேஸ்வரர் திருக்கல்யாண வைபவ தினத்திலே வியாக்கிரபாதர், பதஞ்சலி ஆகியோரின் பொருட்டு சிவபெரு கதை . பொன்னம்பலத்திலே தாண்டவம் பயின்ற நடேசர் பெருமான் அவ்விருவர்களில் பொருட்டு வெள்ளியம்பலத்திற்கு திரு நடனம் செய்தார். இக்கதையை அடிப்படையாகக் கொண்டு திருவாலவாய் வெள்ளியம்பலம் என்று வர்ணிக்கப்பட்டது. பாண்டியர்கள் நடராஜ சபைக்கு வெள்ளி விதானம் அமைத்தனர். வெள்ளியம்பலத்திலே சிவபெருமான் ஆடுகின்ற கூத்தும் சற்று வேறு பட்டதாகும். அங்கு இடக்கால் முயலகன் மீது ஊன்றிய கோலத்தில் அமைந்திருக்க வலக் கால் வீசித் தொங்கிய நிலையில் காணப்பட்டது. கம்பத்தடி மண்டபத்து நடராசின் கோலம் பொன்னம்

பேராசிரியர் சி.பத்மநாதன்

பலத்தில் உள்ளதைப் போன்றதாகும். சிவனுடைய முடி யாடா மகுடமாகும். முன் இக்கரம் கஜகஸ்தமாகும். அதன் பின்னுள்ள கரம் அக்கினிச் சுவாலை ஏந்திய கோலமானது. முன் வரக்கலம் அபயகஸ்தமாகும். பின் வலக்கரம் டமருஹம் ஏந்தியுள்ளது. வீசித் தொங்கிய இடக்கால் முயலகன் பிடித்துள்ள பாம்பின் தலை மேல் தொங்கியுள்ளது. அருகிலே பார்வதியின் உருவம் அமைந்துள்ளது. நடராசின் உருவத்தின் கீழ் நான்கு கரங்களுடன் நந்திதேவர் காணப்படுகின்றார். முன்னி ரண்டு கைகளும் மத்தளம் கொட்ட பின்னிருகைகளும்மான் , மழு ஏந்திய கோலமாய் உள்ளன.

(தொடரும்)

# 2010 ஜனாதிபதித் தேர்தலும் எதிர்நோக்கும் சட்டப் பிரச்சினையும்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் அத்தியாயம் VII இன் கீழான 30 (2), 31 (3), 31(4), 38 (1) (ஈ) ஆகிய ஏற்பாடுகளில் முறையே ஜனாதிபதியின் பதவிக்காலம், ஜனாதிபதி பதவிக்கான வாக்கெடுப்பு நிகழவேண்டிய கால எல்லை, ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆரம்பிக்க வேண்டிய திகதி, ஜனாதிபதி பதவி



வறிதாகும் காரணம் என்பன பற்றிய ஏற்பாடுகள் காணப்படுகின்றன.

அரசியல் யாப்பின் 30 (2) ஏற்பாட்டின்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஆறு ஆண்டு கொண்ட ஒரு தவணைக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்ற ஏற்பாடு காணப் படுகிறது. அவ்வாறாயின் தற்போதைய ஜனாதிபதி எதிர்வரும் 2012ஆம் ஆண்டு வரை இப்பதவியில் தொடருவதை சட்டம் தடை செய்யமாட்டாது. இவ் ஏற்பாட்டின் பிரகாரம் ஜனாதிபதி யாக தற்பொழுது பதவியில் இருப்பவர் அப்பதவிக்கு எதிர்வரும் 2012ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவாராயின் 2012ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை 2012ஆம் ஆண்டில் ஆரம்பிக்கும் ஜனாதிபதிப் பத விக்கு சத்தியப்பிரமாணம் எடுக் காது ஏற்கனவே அப்பதவியில் உள்ள ஆறாண்டு காலத்துக்கான எஞ்சிய இரு ஆண்டு காலத்தையும் கழித்துவிட்டு 2012ஆம் ஆண்டு சத்தியப் பிரமாணம் செய்து அதிலிருந்து அதனை அடுத்து வரும் ஆறு ஆண்டு காலப் பகுதிக்கு ஜனாதிபதியாகப் பதவி வகிக்க சட்டம் வகை செய்வதாகவே பொருள் கொள்ளப்படலாம்.

அரசியல் அமைப்பின் 30 (2) ஆம் ஏற்பாட்டின்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஆறு ஆண்டு காலப் பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டுமென்பதால் 2006ஆம் ஆண்டு தெரிவாகிய ஜனாதிபதி அவர்கள் 2012ஆம் ஆண்டு வரை தற்போது இருந்து வரும் ஜனாதிபதிப் பதவியைத் தொடர முடியுமென்பதை குறித்த 30 (2) ஆம் ஏற்பாடு உறுதிப்படுத்துகின்றது.

அரசியல் அமைப்பின் 31(3) ஆம் ஏற்பாட்டின்படி ஜனாதிபதியைத் தெரிவதற்கான வாக்கெடுப்பானது பதவியிலுள்ள ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஒரு மாத கால எல்லைக்குக் குறையாமலும், இரண்டு மாத எல்லைக்கு மேற்படாத இடைப்பட்ட காலத்துக்குள் நடாத்தப்படல் வேண்டுமென்ற ஏற்பாடு காணப்படுகிறது. அவ்வாறாயின் தற்பொழுது பதவி வகிக்கும் ஜனாதிபதி தனது ஆறாம் ஆண்டு பதவிக்காலம் முடிவடை வதற்கு நேர்முன்னரான (பின்நோக்கி) இரு மாத காலத்துக்குள் மட்டும் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று அதில் வெற்றி பெறுவதன் மூலமே 2012ஆம் ஆண்டில் புதிய ஜனாதிபதியாக அமரமுடியும்.

குறித்த 31 (3) ஆம் ஏற்பாட்டின்படி ஆராயின் இம்மாதம் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போது ஜனாதிபதியாகப் பதவியில் இருந்துவராத புதிய அபேட்சகர் எவராவது வெற்றியீட்ட நேர்ந்தால் 2012ஆம் ஆண்டு வரை அப்பதவிக்காகப் பொறுத்திருக்க வேண்டுமென்பதுடன் அவ்வாறு பொருத்திருந்தாலும் குறித்த தேர்தல் குறித்த சட்டவிதிக்கு அமைய நடத்தப்படவில்லையென்ற கேள்விகூட எழுப்பப்படவும் முடியும்.

அரசியல் அமைப்பின் 31(4) ஆம் ஏற்பாட்டின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக்காலம் அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட திகதியை அடுத்துவரும் பெப்ரவரி 4ஆம் திகதி ஆரம்பிக்கப்படவேண்டியது என்ற ஏற்பாடு காணப்படுகிறது. தற்போது பதவி வகித்து வரும் ஜனாதிபதியின் ஆறு ஆண்டுக்காலம் முடிவடையும் 2012ஆம் ஆண்டுக்குள் வேறு புதியவர்கள் இவ்வருட தேர்தலில் ஜனாதிபதியாகத் தெரிவானால் இவ்வருடம் பெப்ரவரி 4ஆம் திகதி குறித்த ஜனாதிபதிப் பதவியைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்ற வினா எழுப்பப் படவும் இடமுண்டு.

அரசியலமைப்பு 38 (1) (ஈ) ஆம் ஏற்பாட்டின் பிரகாரம் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவர் அவரது பதவிக்காலம் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்துக்குள் பதவியேற்கத் தவறின் பதவி வெற்றாகும் என்ற ஏற்பாடு காணப்படுகிறது. ஜனாதிபதிப் பதவிக்கால ஆரம்பம் 31 (4) ஆம் ஏற்பாட்டின்படி தேர்தல் நடைபெற்றதைத் தொடர்ந்து வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதியென்ற ஏற்பாடு காணப்படுவதால் ஜனாதிபதியாகத் தெரிவானாவர் தெரிவாகியதைத் தொடர்ந்து வரும் பெப்ரவரி 4ஆம் திகதி அல்லது அதற்கு முன் ஜனாதிபதிப் பதவியை ஏற்கும் முகமாக சத்தியப் பிரமாணத்தை செய்திருத்தல் வேண்டும். அவ்வாறாயின் தற்பொழுது ஜனாதிபதிப் பதவியில் இருந்துவரும் ஜனாதிபதியின் பதவிக்காலம் 2012ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருப்பதால் வேறு எவராவது புதிதாக ஜனாதிபதிப் பதவிக்கு வெற்றியீட்டினால் இவ்வருடம் பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன் பதவி ஏற்க சத்தியப்பிரமாணம் செய்ய முடியுமா என்பதுவும் ஓர் கேள்விக்குறியாக அமைகிறது.

இவ்வருடம் தேர்தலில் புதிய வர்கள் யாராவது வெற்றியீட்டின் அதை அடுத்துவரும் பெப்ரவரி 4ஆம் திகதிக்குள் பதவி ஏற்றே தீரவேண்டும் என்பது சட்ட நிலைப்பாடாக அமைகின்றது. ஏற்கனவே ஜனாதிபதியாக பதவி வகித்த சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் தனது ஜனாதிபதி பதவிக்கான காலம் வரமுன் நடத்திய ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் வெற்றியீட்டி அத்திகதியிலிருந்து இரு மாத காலத்துக்குள் அடுத்த ஜனாதிபதிப் பதவிக்கு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையால் முதல் தடவை ஜனாதிபதிக் காலம் முடிவதையும் (ஆறு ஆண்டு காலம் முழுப்படியாக அப்பதவிக் காலத்தை) அவரால் அனுபவிக்க முடியாது. உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி அமைந்துவிட்டது. ஆனால் முதல் ஆறு ஆண்டு காலம் பூரணமாக முடிந்தபின் அடுத்து வந்த ஜனாதிபதிக் காலத்துக்கு சத்தியப்பிரமாணம் செய்திருந்தால் பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் ஜனாதிபதியாக இருந்திருக்க முடியும். எனவே தற்போதைய ஜனாதிபதி வெற்றியீட்டின் 2012ஆம் ஆண்டு வரை பொறுத்திருந்து அதன் பின் புதிய பதவிக்கு சத்தியப்பிரமாணத்தை




செய்து 2012ஆம் ஆண்டில் பதவி ஏற்பினை செய்து கொள்ளு வாராயின் இரு தடவைகளுக்குமான 12 ஆண்டுகளை அப்பதவியில் பூரணமாக அனுபவிக்க சட்டம் வழி அமைக்குமெனவும் பொருள் கொள்ள இடமுண்டு.

மாற்றுக்கட்சி வேட்பாளர்கள் இவ்வருடம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் மக்கள் விருப்பம் மரபு என்ற அடிப்படையில் பதவியில் இருப்பவர் வழிவிட்டுக் கொடுக்க வேண்டிய நிலையும் நடைமுறையில் கடந்த காலங்களில் பல நாடுகளிடையே நிகழ்ந்துள்ளவையும் மறுக்கமுடியாது. எனவே தேர்தலின் முடி வின்பின்பே குறித்த சட்ட சிக்கல்களுக்கான முடிவு அமையலாம்.

**அருளம்பலம் இராஜரட்ணம் L.L.B**
**சிரேஷ்ட சட்டத்தரணி**
**சட்டவிரிவுரையாளர்.**

## புலம்பெயர் இலங்கை மக்களுக்கும் வாக்களிக்க சந்தர்ப்பம் வழங்கவேண்டும்

### மிலிந்த மொரகொட



இலங்கைப் புலம்பெயர் மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொரகொட தெரிவித்துள்ளார். ஒரு மில்லியனுக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் உலகமெங்கிலும் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருவதாகவும் குறித்த மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் புலம்பெயர் இலங்கையர்களின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு புலம்பெயர் இலங்கையர்கள் வழங்கி வரும் பங்களிப்பினை குறைத்து மதிப்பிடக்கூடாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். மிகவும் இன்றியமையாத அந்நிய செலாவணி வருமானத்தில் புலம்பெயர் இலங்கையர்கள் காத்திரமான பங்களிப்பினை வழங்கி வருவதாகவும் தேர்தல் முடிவுகளை தீர்மானிக்க அவர்களுக்கும் வாய்ப்பு கிட்டவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுத் தேர்தல்களின் போது இந்திய புலம்பெயர் மக்கள் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை அண்மையில் அந்நாட்டு பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தியுள்ளார் என அமைச்சர் மொரகொட குறிப்பிட்டுள்ளார். (2-6)

## இலங்கை வீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி

### விமானப் படை அதிகாரி செவ்வி

(சென்னை)

அவசியம் ஏற்பட்டால் இலங்கை உட்பட வெளிநாட்டு விமானப் படை வீரர்களுக்கு இந்திய விமானப் படைத் தளங்களில் பயிற்சி அளிக்கப்படுமென தாம்பரம் விமானப் படைக்குப் புதிய தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்ற சஞ்சய் சர்மா கூறினார்.

நேற்று முன்தினம் நடந்த அணிவகுப்பு நிகழ்ச்சியில் விமானப் படை வீரர்களின் அணிவகுப்பை ஏற்றுக்கொண்டபின் புதிய தலைமை அதிகாரியாக சஞ்சய் சர்மா பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் அளித்த பேட்டியில்; இந்திய விமானப் படை பயிற்சித் தளங்களில் தாம்பரம் மையம் சிறப்பாகச் செயற்பட்டு வருகிறது.

நாட்டிற்கு தற்போது பல்வேறு வகையான அச்சுறுத்தல்கள் உள்ளன. இந்நிலையில் நாட்டில் தென்பகுதியில் உள்ள விமானப் படைத் தளங்கள் அதிக முக்கியத்துவம் அடைந்துள்ளன. நவீன ஹாக் ரக விமானங்கள் தற்போது விமானப் படை வீரர்களின் பயிற்சிக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு இறுதிக்குள் அனைத்து விமானப் படை பயிற்சி தளங்களிலும் அதிநவீன ஜெட் தொழில்நுட்பத்திலான ஏ.ஜெ.டி. ரக விமானங்கள் மூலம் வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். இந்தியா, இலங்கை இடையே எந்தப் பிரச்சினையும் இல்லை.

எனவே அந்நாட்டு விமானப் படை வீரர்களுக்கு இந்திய விமானப் படையில் பயிற்சி அளிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவசியம் ஏற்பட்டால் இலங்கை உட்பட வெளிநாட்டு விமானப் படை வீரர்களுக்கும் இந்திய விமானப் படைப் பயிற்சித் தளத்தில் தொடர்ந்து பயிற்சி அளிக்கப்படும் என்றும் சஞ்சய் சர்மா கூறினார். (2-6)

# பதவிக் காலத்தில் காட்டாத கரிசனையை மகிந்த தேர்தல் காலத்தில் காட்டுகிறார்

## ஐக்கிய தேசிய முன்னணி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினதும் அவரது அரசாங்கத்தினதும் முதலைக் கண்ணீர் நாடகமானது தேர்தலை நோக்காகக் கொண்டதே தவிர நம்பிக்கைக் குரியதல்ல. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு என்ற வாய்ப்பேச்சு உறுதி மொழியானது தேர்தல் முடிந்த கையோடு குப்பையில் வீசப்படும் என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசிய முன்னணி தெரிவித்துள்ளது.

ஜெனரல் பொன்சேகாவுக்குப் பயந்து ஏ-9 பாதையைத் திறந்திருப்பதும் அதி உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவதும் தேர்தலின் பின்னரும் நீடிக்கும் என்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொடுத்திருக்கும் உத்தரவாதம் என்ன என்றும் முன்னணி கேள்வி எழுப்பியுள்ளது.

தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருந்த உறுதிமொழி குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் கடந்த 60 வருட காலமாக ஏமாற்றப்பட்டு வந்தனர் என்பதை எந்தச் சிங்களவராலும் மறுக்க முடியாததாகும். நாட்டை ஆட்சி செய்த ஒவ்வொரு அரசாங்கமும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டும் என்ற நியாயமான நிலைப்பாட்டினைக் கொண்டிருந்ததில்லை. இது வரலாற்று உண்மையாகும்.

இந்நிலையில் 2010ஆம் ஆண்டு இதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் என்பதில் யாவருக்கும் நம்பிக்கை பிறந்துள்ளது.

இந்த நம்பிக்கையை நிஜமாக்கும் சக்தியும் சிந்தனையும் ஐக்கிய தேசிய முன்னணியிடமே இருக்கின்றது என்பதை பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும்.

தமிழ் பேசும் மக்களுக்கு நிரந்தரமான தீர்வு பெற்றுக்கொடுக்கவேண்டும் என்ற சிந்தனை ஒட்டுமொத்த சிங்களவர்களிடமும் எழுந்திருக்கின்றன. இன்றைய நிலையில் தான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இடையில் புகுந்துள்ளார்.

தான் பதவியில் இருந்த காலப் பகுதியில் தமிழ் மக்களிடம் காட்டாத கரிசனையைத் தற்போது தேர்தல் காலத்தில் காட்டிக்கொண்டிருக்கின்றார்.

எம்மிடம் நேர்மை இருக்கிறது. தமிழ் மக்களது நம்பிக்கையும் இருக்கிறது.

இந்நிலையில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் ஏமாற்று வித்தைகளை தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு-கிழக்கைச் சேர்ந்த மக்கள் நம்பிவிட வேண்டாம் என்பதே எமது வேண்டுகோளாகும்.

ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்று உருவாக்கப்பட்ட சர்வகட்சி குழுவையும் அதன் அறிக்கைகளையும் அரசாங்கம் எப்போதோ குப்பைக் கூடையில் போட்டுவிட்டது.

அது மட்டுமல்லாது வடக்கில் வாய் மூல உறுதிமொழிகளைக் கொடுக்கின்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெற்கில் அது குறித்து வாய் திறப்பதில்லை. தமிழ் மொழியில் பேசுவதால் மாத்திரம் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு எட்டிவிடாது என்றார்.

(2-4)




## நாட்டைக் காட்டிக்கொடுக்கும் ஓர் சொல்லும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லை

### ஜனாதிபதி

(கொழும்பு)

தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் ஓர் சொல்லையேனும் தமது தேர்தல் விஞ்ஞாபனம் உள்ளடக்கவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபன வெளியீட்டு வைபவத்தில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டு முதல் தடவையாக தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டபோது அது நடைமுறைச் சாத்தியப்பாடற்றதென எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த தேர்தல் விஞ்ஞானபத்தை தாம் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தமிழீழ விடுதலைப்புலிகளை இல்லாதொழித்து நாட்டு மக்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளதாகவும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காகவே இரண்டாவது தடவையாக தாம் மக்கள் ஆணையைக் கோருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(2-6)

## தேர்தல் சட்ட விதிமுறைகள் பாரிய அளவு மீறப்பட்டு வருகின்றன

### கபே அமைப்பு

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்திலிருந்து நேற்று வரையிலும் 234 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கமான கபே அமைப்பின் ஊடக இணைப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்தார்.

இதற்கமைய நாட்டின் பல பாகங்களில் தேர்தல் தொடர்பான கட்டவுட்கள் மற்றும் போஸ்டர்கள் இன்னும் அகற்றப்படாமல் உள்ளன. அவற்றை அகற்றுமாறு தேர்தல் ஆணையாளர் பொலிசாருக்கு அறிவித்துள்ளபோதிலும்இதுவரையிலும் அவற்றை அகற்றுவதற்கான எதுவித நடவடிக்கைகளையும் பொலிசார் எடுக்காமல் உள்ளனர். எனவே தேர்தல் விதிமுறைகளை இவ்வாறு மீறுவோரை தடுத்து நிறுத்த தேர்தல் ஆணையாளருக்கு உள்ள அதிகாரங்களை அவர் பிரயோகிக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், ஜனாதிபதி தேர்தலுக்கான கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தேர்தல் ஆணையாளர் உரையாற்றியபோது சகல கட்சிகளும் தேர்தல் சட்ட விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமெனக் கோரப்பட்டதோடு அவ்வாறு தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறுவோருக்கு எதிராக பொலிசார் சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் பணிப்புரை விடுத்திருந்தார்.

ஆனால் தற்பொழுது தேர்தல் சட்ட விதிமுறைகள் பாரிய அளவு மீறப்பட்டு வருகிறது. அது மாத்திரமல்லாமல் தேர்தல் ஆணையாளரின் பணிப்புரைகளைப் பொலிசார் பின்பற்றுவதாகத் தெரியவில்லை. எனவே நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் கூறினார்.

(2-6)

## நாட்டை சீர்குலைப்பதா? பாதுகாப்பதா? மக்களே தீர்மானிக்கவேண்டும்

### கோத்தபாய ராஜபக்ஷ

(கொழும்பு)

நாட்டைச் சீர்குலைப்பதா அல்லது பாதுகாப்பதா என்பது தொடர்பில் மக்கள் இந்தத் தேர்தலில் தீர்மானிக்க வேண்டுமெனப் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சில உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் கூட்டாக இணைந்து நாட்டிற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மூன்று தசாப்த காலமாக நீடித்த கொடிய பயங்கரவாதத்தை இல்லாதொழித்து நாட்டைப் பயங்கரவாதப் பிடியிலிருந்து விடுவிக்கத் தமக்குச் சந்தர்ப்பம் கிட்டியது என்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான இந்த வரலாற்று யுத்தத்தின்போது சுமார் 27ஆயிரம் படைவீரர்கள் உயிர்த்தியாகம் செய்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் யுத்த காலத்தில் இலங்கைக்கு எதிராக செயற்பட்ட சில சக்திகள் மீண்டும் நாட்டுக்கு எதிரான சதித் திட்டங்களைத் தேர்தல் காலத்தில் ஆரம்பித்துள்ளதாகவும் இந்த



தேச விரோத சக்திகளுக்கு எதிராக அனைத்து தேசப்பற்றாளர்களும் அணிதிரள வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் படையினர், காவல்துறையினர், சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பொதுத்துறை ஊழியர்கள், சமயோசிதமாக இந்தத் தேர்தலில் தீர்மானங்களை எடுப்பார்கள் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

(2-6)

## எதிர்க்கட்சியுடன் சிலர் இணைந்தபோதிலும் எமது கட்சி பலவீனமடையவில்லை



### ஆறுமுகன் தொண்டமான்

(கொழும்பு)

சிலர் எதிர்க்கட்சியுடன் இணைந்தபோதிலும் கட்சி பலவீனமடையவில்லையென இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார். பெருந்தோட்டத் தமிழ் மக்கள் எந்தக் காரணத்திற்காகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைவிட்டு விலகிச் செல்லமாட்டார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் முன்வைக்கப்பட்ட திட்டங்களுக்கு அமைய பெருந்தோட்டப் பகுதிகளை அரசாங்கம் நிர்வாகம் செய்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

டிக்கோயா பகுதியில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நீங்களும் கட்சி தாவுவீர்களா என ஜனாதிபதி தம்மிடம் கேட்டதாகவும் அதற்கு ஒருபோதும் தாம் கட்சித் தாவப்போவதில்லை எனப் பதிலளித்தாகவும் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார். மேலும் 2005ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளித்த போதிலும் தோட்டப்புற மக்களுக்கு எவ்வித நன்மைகளும் கிட்டவில்லை. தற்போது பெருந்தோட்ட மக்களைப் பிழையான வழியில் இட்டுச் செல்லும் வகையிலான பிரசாரங்களை எதிர்க்கட்சிகள் மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## தேர்தல் பிரசார செலவீனங்கள் விடயத்தில் மகிந்த ராஜபக்ஷவே முன்னிலையில்

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிக அதிக பொருட் செலவில் தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்வதுடன் அரச உடைமைகளையும் பயன்படுத்தி வருவதாக பொதுமக்களின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான அனைத்துலக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதித் தேர்தலுக்காக பொதுமக்களின் சொத்துக்கள் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

அது தொடர்பாக நாம் இரண்டாவது அறிக்கையை வெளியிட்டுள்ளோம். அதனை நீங்கள் பின்வரும் இணையத்தள முகவரி ஊடாக அறிந்து கொள்ள முடியும்.

Http: //www.tisrilanka.org

ஜனாதிபதி தேர்தலுக்காக மகிந்த ராஜபக்ஷ இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் ஊடாக செலவிட்ட தொகை 200 மில்லியன் ரூபாய்களைத் தாண்டியுள்ளது. ஆனால் பொன்சேகா தனது பிரசாரங்களுக்கு செலவிட்ட தொலை ஏழு மில்லியன் ரூபாய்கள் என அது மேலும் தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(2-6)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 9 விதி எண் : 9

### உடலமைப்பு

பிறந்த எண் விதி எண் இரண்டுமே 9 ஆகக் கொண்டு பிறந்தவர்கள் செவ்வாயின் முழு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் நடுத்தர உயரமானவர்களாகவும் கம்பீரத் தோற்றமுள்ளவர்களாகவும் இருப்பர். இவர்களின் குரல் கனத்திருக்கும்.

### மன, குணவியல்பு

இவர்கள் பார்ப்பதற்கு அச்சமூட்டக் கூடியவராக இருந்தாலும் நல்லவர்கள். பிறர் எவருக்கும் சிறு தீங்கும் நினைக்க மாட்டார்கள். மற்றவர்களின் முன்னேற்றத்திற்குத் தம்மால் எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு உதவி புரிவர்.

இதனால் பலரும் இவரிடம் விரும்பி நெருங்கிப் பழகுவர். அதனால் நண்பர்கள் பலர் இருப்பர். இவர்கள் மன உறுதியுள்ளவர்கள்.

எதிலும் அவரசப்போக்கு இருக்காது. தனக்குப் பெரிய பிரச்சினை ஏற்பட்டாலும் பதற்றமடையாது. நிதானமாக யோசித்து சாமர்த்தியமாக அதிலிருந்து மீண்டு வருவர்.

இவர்கள் புதிய சிந்தனையும் புதிய செயல்களில் ஈடுபடக் கூடியவர்களாகவும் இருப்பர். இவர்கள் தமக்கென்று ஒரு வழியை நிர்ணயித்து அதைப் பின்பற்றுவர்.

இவர்கள் மனத்தில் ஒன்றிலும் வெளியில் மற்றொன்றுமாகப் பேச மாட்டார்கள். எதிலும் ஒளிவுமறைவு இருக்காது. இயற்கைக் காட்சிகளையும் அழகுப் பொருட்களையும் ரசிக்க வல்லவர்களாக இருப்பர்.

எப்போதும் சோம்பலாக இருக்க மாட்டார்கள். அதே சமயம் பயனற்ற செயலையும் புரிய மாட்டார்கள். தானும் பிறரும் உயர்வடையக் கூடிய செயல்களையே புரிவர்.

இவர்கள் சந்தோஷத்தைப் போல வேதனை தரும் சம்பவங்களைக்கூட வரவேற்று ரசிக்க வல்லவர்கள்.

எதிரிகளைக் கண்டு அஞ்ச மாட்டார்கள். அவர்களை முறியடிக்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு நல்ல வாழ்க்கைத் துணை அமைய நேரினும் குடும்ப வாழ்க்கை பிரச்சினைகளும் குழப்பமும் மிகுந்ததாகவே இருக்கும். அதனால் குடும்பத்தில் சந்தோஷம், அமைதி நிலவுவது கடினம்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் புதுமை விரும்பிகளாக இருப்பர். புதிய கருத்துக்களை எழுதுவதிலும் பேசுவதி லும்வல்லவர்களாக இருப்பர். அதைப் போன்று இவர்கள் மருத்துவம், பொறியியல், தொழில்கள் போன்ற எத்துறையில் ஈடுபட்டிருந்தாலும் அதில் தமக்கென ஒரு பாதையை அமைத்துச் செயல்படுவர். கட்டடம் கட்டுதல், ஆடம்பரம் மற்றும் பல்பொருள் வியாபாரம் போன்றவற்றில் கூட இவர்கள் முன்னேறக்கூடும்.

இவர்கள் தொழிலில் முன்னேற்றமும் பெருமளவு பொருள் சம்பாதிக்கவும் கூடும்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு இருதயக் கோளாறு, இரத்த அழுத்தம், முதுகுவலி, மூட்டுவலி போன்றனவும் வயிற்றுக் கோளாறு, கண்நோய், பல்நோய் போன்றனவும் ஏற்பட வாய்ப்புண்டு. இவர்களுக்கு அடிக்கடி ஏதேனும் ஒரு நோய் தொல்லை கொடுக்கக் கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்களுக்கு புதன், சுக்கிரன், செவ்வாய் ஆதிக்கம் பெற்ற 5,6,9 அது தொடர்பிலான எண்களில் யோகமான பலன் தருபவனவற்றில் ஒன்றில் பெயர் அமைத்துக் கொள்ளலாம். தம் நிறுவனங்களுக்கும் 5,6,9 அது தொடர்பிலான எண்களில் பெயர் அமைக்க யோகமாகும்.

இவர்களுக்கு 5,6,9 அது தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமானவை.

ஆனால் சந்திரன், கேது ஆதிக்கம் பெற்ற 2,7 அது தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமற்றவை.

### பெயர் அமைக்க கவனிக்க வேண்டியவை

இதுவரை பிறந்த எண் 9 க்கு விதி எண் 1 முதல் 9 வரையிலான பலன்களைக் கண்டோம்.

பிறந்த எண்ணுக்கு விதி எண் நட்பாக இருக்குமானால் இதுவரை கூறப்பட்ட பலன்கள் நடக்கும். பகையாக இருக்குமாணால் பலன்களிலும் நிச்சயமற்ற தன்மை காணப்படும்.

அந்த நிலையில் தான் இரண்டு எண்களுக்குப் பொருத்தமான யோகப்பலன் தரும் எண்களுக்கு அமைத்துக் கொள்வதால் நற்பலன்களைப் பெறக்கூடும்.

இரண்டு எண்களும் ஒன்றுக்கொன்று பகையாக இருக்கும் நிலையில் இவர்களுக்கு நல்ல பலனளிக்கும் எண்கள், திகதியையும் பாதக பலனளிக்கும் எண்கள், திகதியையும் வரையறுத்துக் கூறமுடியாத இக்கட்டான நிலை ஏற்படவும் கூடும்.

அந்த சந்தர்ப்பங்களில் அவர்களின் நடைமுறை வாழ்க்கையில் அதுவரை நடந்த நல்ல நிகழ்ச்சிகள், கெட்ட நிகழ்ச்சிகளைக் குறித்து அதில் நல்லது நடந்த எண்கள் (பாஸ் செய்த சர்டிபிகேட் எண், அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் எண், திருமண நாள் போன்றண) மற்றும் திகதியை நல்ல பலனளிக்க வல்லவை என்றும், அதைப் போன்று தீய நிகழ்ச்சி நடந்த எண்களும் திகதியும் யோகமற்றவை என்றும் நிச்சயிக்கலாம்.

இதுவரை கூறப்பட்ட மன, குணவியல்பு, குடும்ப வாழ்க்கை போன்றவற்றில் தீயதாக இருப்பின், பிறவி எண், விதி எண்ணுக்குப் பொருந்தும் பெயர் அமைத்துக் கொள்ள அதனால் ஏற்படும் கொடிய பலன் தவிர்க்கப்படும்.

ஒவ்வோர் எண்ணுக்குரியவருக்கும் கூறப்பட்டுள்ளவை அவர்களுக்குப் பொருந்தக் கூடிய தொழில்கள், அவர்களுக்கு பெயர் எண், பிறவி மற்றும் விதி எண்ணுக்குப் பொருத்தமாக யோகமுள்ளதாக இருப்பின் தொழிலில் முன்னேற்றமும், பொருளாதாரத்தில் செழிப்பும் பெறலாம்.

ஒரு சிலர் தமக்குப் பொருந்தாத தொழிலில் ஈடுபட்டிருப்பாரேயானால் அவர்கள் பொருந்தும் தொழிலுக்கு தம்மை திருப்பிக் கொண்டு முன்னேறலாம்.

ஆரோக்கியக்கேடு இயல்பாக ஏற்படக் கூடியதே. தம் பெயரை பொருத்தமுள்ளதாக அதிர்ஷ்டமாக அமைத்துக் கொண்டால், நோய் ஏற்பட்டால் அதனால் பெருமளவு பாதிப்பின்றித் தவிர்க்கப்படலாம்.

இனி பெயரை அமைத்துக் கொள்வதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களை ஆராய்வோம்.

பிறந்த எண் 9 ஆகக் கொண்டவர்கள் செவ்வாயின் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். செவ்வாய் அசுப கிரகமாக இருந்தாலும் இந்த கிரகத்திற்குரிய 9 என்ற எண் 4,7 ஐ போல விரும்பகத்தக்கதல்ல.

பிறந்த எண் 9 காரர்களில் விதி எண் 7 ஐக் கொண்டவர்களைத் தவிர மற்றவர்க ளுக்கு 9 எண்ணில் பெயர் வருமாறு அமைத் துக் கொள்ள யோகமாக இருக்கும்.

விதி எண் 2,7 காரர்கள் மட்டும் சுக்கிரன், புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6,5 ஒன்றில் யோகப் பலனளிக்கும் எண்களுக்கு பெயர் அமைத்துக் கொள்ளலாம். இந்த இரு எண் காரர்களுக்கு தீமையளிக்கும் எண்கள் இல்லையென்று கூறலாம்.

ஆனால் பிறந்த எண் 9 காரர்களுநுக்கு 2 அல்லது 7 இல் பெயர் அமைந்திருக்குமானால் சோதனை வேதனை மட்டுமின்றி அடிக்கடி விபத்துக்ளுக்குள்ளாகவும் நேரும். இந்த இரு எண்களும் இவர்கள் கட்டாயம் விலக்க வேண்டியவை.

விதி எண் 1,4 காரர்கள் சூரியன் ஆதிக்கம் பெற்ற 1இல் 28 ஐ தவிர்த்து வேறு யோகப் பலனளிக்கவல்ல எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

பொதுவாக பிறந்த எண் 9 ஆகக் கொண்டவர்களின் விதி எண் எதுவாக இருந்தாலும் அவர்கள் புதனின் ஆதிக்கத்திற்குட்பட்ட 5 ஆதார எண்ணில் யோகப் பலன் தருவனவற்றில் பெயர் அமைத்துக் கொள்ள யோகமாகும்.

தம் நிறுவனங்களுக்குக் கூட 5,9,6 இல் ஒன்றில் எது தமக்கு பொருந்துமோ அதில் யோகப்பலனளிக்கக் கூடிய எண்களில் பெயர் அமைத்துக் கொள்ள முன்னேற்றமும் வாழ்க்கையில் பிரகாசமும் பெறலாம். (முற்றும்)

# நோர்வே அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயார் - ஜே.வி.பி

(கொழும்பு)

நோர்வே அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என ஜே.வி.பி. கட்சி அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நோர்வே அரசாங்கத்துடன் இராஜதந்திர உறவுகளைப் பேணுவதற்கு தாம் எதிர்ப்பை வெளியிடப் போவதில்லை என கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

பிரிவினை வாதத்தை தூண்டுவதாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக செயற்படுவதாகவும் நோர்வே மீது ஜே.வி.பி. கடந்த காலங்களில் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் நோர்வே அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட தாம் விரும்பவில்லை என கட்சி தெரிவித்து வந்தது தெரிந்ததே.

எனினும் தற்போது யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் நோர்வேயுடன் காத்திரமான ராஜதந்திர உறவுகளைப் பேணுவதில் தவறில்லை என ஜே.வி.பி. தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுள்ளது.

இதற்கமைவாக பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுடைய சில கொள்கைகளில் தமக்கு உடன்பாடு இல்லாத போதிலும் தமது கட்சி குறித்த நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளைப் பேணி வருவதாக கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட இணக்கப்பாடுகளைத் தவிர வேறு எந்த இணக்கப்பாடுகளும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் சரத் பொன்சேகா ஏற்படுத்திக் கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ள நிலையில் உயர் பாதுகாப்பு வலயங்களை தொடர்ந்தும் பேணுவதில் அர்த்தமில்லை என்றும் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் விடுத்த அறிவிப்பையே தற்போது ஜனாதிபதியும் விடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# வடக்கின் வசந்தம் மூலம் சிங்கள முஸ்லிம் மக்களுக்கு குறைந்தளவான நன்மைகளே கிடைக்கின்றன - தேரர்கள்

(கொழும்பு)

வடக்கின் வசந்தம் திட்டத்தின் மூலம் சிங்கள முஸ்லிம் மக்களுக்கு குறைந்தளவு நன்மைகளே கிடைக்கப்பெறுவதாக பௌத்த தேரர்கள் ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதற்கமைய வடக்கில் வாழும் சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களுக்கும் அதிகளவு நன்மைகள் கிடைக்கக்கூடிய வகையில் திட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கின் வசந்தம் திட்டம் முன்னெடுக்கப்படும் போது வடக்கில் சிங்கள முஸ்லிம் மக்கள் வாழ்கின்றமையை அரசாங்கம் மறந்து செயற்பட்டுள்ளதாக மகாநாயக்க தேரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வடக்கின் வசந்தம் தமிழ் மக்களுக்கான வசந்தமாக மாறியுள்ளதென சிங்கள முஸ்லிம் மக்கள் விசனம் வெளியிட்டு வருவதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்காக எதிர்காலத் திட்டங்களின் போது சகல இன சமூகங்களுக்கும் நியாயம் கிட்டும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## தேர்தல் கடமைகளுக்கான பயிற்சி வகுப்புக்கள்

கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறும் என யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் இப்பயிற்சி வகுப்புக்கள் யாவும் நடைபெறுவதற்குரிய விசேடமான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இப்பயிற்சி நெறிக்கு கிளிநொச்சி மாவட்டத்திற்கு விண்ணப்பித்திருந்த அனைவரும் இதில் கலந்துகொள்ள முடியுமெனவும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (4-30)

# ஆப்கானிஸ்தானில் இடம் பெற்ற தாக்குதலில்

## ஆறு சர்வதேச படைவீரர்கள் பலி

ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற தாக்குதலில் ஆறு சர்வதேச படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த படைவீரர்களே இவ்வாறு தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். கடந்த இரண்டு மாதங்களில் இடம் பெற்ற மிக மோசமான தாக்குதல் இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் மூன்று அமெரிக்க படைவீரர்களும் ஒரு பிரித்தானிய படைவீரரும் கொல்லப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஆப்கானிஸ்தானின் வட பகுதியில் பிரெஞ்சு படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஏனைய படைவீரரின் ஆள் அடையாளம் இன்னமும் உறுதிப்படுத்தப் படவில்லை.

இந்த ஆண்டில் இதுவரையில் இடம் பெற்ற தாக்குதல்களில் 15 வெளிநாட்டு படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தானில் மொத்தமாக ஒரு இலட்சம் அமெரிக்க துருப்பினர் நிலை கொண்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (2-6)

# எம்மீது போர் தொடுத்தால் மோசமான விளைவேற்படும்

## -ஈரான் எச்சரிக்கை-

எங்கள் மீது மேற்கத்திய நாடுகள் போர் தொடுத்தால் மோசமான விளைவுகள் ஏற்படும் என்று ஈரான் அந்த நாடுகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. ஈரான் நாடு அணு ஆராய்ச்சியில் ஈடுபட்டு உள்ளது. அது ஏவுகணை சோதனை நடத்தி வருகிறது. ஈரான் நாடு அணு ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கு அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்த எதிர்ப்பை பொருட்படுத்தாமல் தொடர்ந்து அணு ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறது. இதற்கிடையில் ஈரானின் அணுசக்தி மையங்கள் மீது குண்டு வீசி அவற்றை தகர்க்க திட்டமிட்டுள்ளன என்று கூறப்படுகிறது. ஈரான் மீது மேற்கத்திய நாடுகள் இராணுவ நடவடிக்கை எடுத்து அதை மிரட்டி பணிய வைக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இது குறித்து ஈரான் இராணுவ மந்திரி பிரிகேடியர் ஜெனரல் அகமது வஹிதி டெக்ரான் நகரில் இராணுவ தளபதிகள், அதிகாரிகள் கூட்டத்தில் பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

ஈரான் ஏவுகணைகளின் தாக்கும் திறன் எதிரிகள் கற்பனை செய்யது கூட பார்க்க முடியாத அளவுக்குள்ளது. ஈரானின் பலம் தேசிய மற்றும் பிராந்திய பாதுகாப்புக்கு உறுதி அளிப்பதாகும். இஸ்லாமிய பண்பாட்டுக்கு எதிரான சக்திகள் எங்கள் மீது தாக்குதல் நடத்த நினைத்தால் அதற்கு தக்க பதிலடி கொடுப்போம் என்றார். (2-6)

# இந்தியச் சிறுமி அழும்போது கண்ணீருக்கு பதிலாக இரத்தம்

(லண்டன்)

உத்தரபிரதேச மாநிலத்தைச் சேர்ந்தவர் ட்விங்கிள் திவிவேதி 13 வயதான இவர் இங்கிலாந்தில் வசித்து வருகிறார். இந்த சிறுமி அழ ஆரம்பித்தால் கண்ணில் கண்ணீர் வருவதற்கு பதில் இரத்தம் வடிகிறது. அது மட்டுமல்லாமல் கை, கால்,தலை என உடலின் பல்வேறு பாகங்களிலிருந்து இரத்தம் வடிகிறது.

இரத்தம் பல இடங்களிலிருந்து வருகிறது. இதுவரை இப்படி ஒரு பிரச்சினையை பார்த்ததே இல்லை என இங்கிலாந்தின் பிரபல மருத்துவர் ஜார்ஜ் புக்கனன் தெரிவித்தார்.

11ஆம் வயதில் முதன் முதலாக அழும் போது இப்படி இரத்தம் வந்தது ஆனாலும் இரத்தம் வருவதால் எனக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. சிறிது நேரத்துக்கு தலைவலியும் உடல் சோர்வாகவும் உள்ளது. மேலும்




இந்த பிரச்சினையால் பள்ளிப்படிப்பையும் தொடர முடியாமல் உள்ளார். ஏற்கனவே படித்து வந்த பள்ளி நிர்வாகம் வெளி யில் அனுப்பி விட்ட நிலையில் வேறு பள்ளியிலும் சேர்க்க மறுக்கின்றனர். இதுவரை இப்படி ஒரு சம்பவத்தைப் பார்த்ததே இல்லை என மருந்துவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

எனினும் இரத்தம் உறையாததே இதற்குக் காரணமாக இருக்கலாம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

ட்விங்கிளின் உடல் நிலையை பரிசோதித்தேன். உடலில் எந்த இடத்திலும் காயம் எதுவும் இல்லாத நிலையில் அழும்போது துணி முழுவதும் இரத்தக் கறை படிந்து அசுத்தமாகி விடுகிறது. மற்றவர்கள் என்னை வெறுக்கிறார்கள். எனவே இப்போது அழுவதை நிறுத்திக் கொண்டேன் என ட்விங்கின் தெரிவித்துள்ளார்.

மேலும் எனது மகளின் பிரச்சினை தீர கோயில், சர்ச், தர்கா என அனைத்துக்கும் சென்று வந்தேன் பலன் கிடைக்கவில்லை. சிகிச்சை எடுத்துக்கொள்வதற்கான வசதியும் எங்களிடம் இல்லை என ட்விங்கிளின் தாய் நந்தினி தெரிவித்துள்ளார்.

இந்த சிறுமி தனியார் தொலைக்காட்சி ஒன்றின் மூலம் நேரடியாக சிகிச்சை உதவி கேட்கவுள்ளார். (2-6)



ரஷ்யா சுற்றுலாதுறை சார்பாக தயார் செய்யப்பட்ட சகல வசதிகள் கொண்ட சிறிய ரக கப்பல்

# பெண்தூதர்களின் எண்ணிக்கை அமெரிக்காவில் அதிகரிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்கா தலைநகரான வோஷிங்டனில் தற்போது இருக்கும் வெளிநாட்டு தூதர்களில் இந்திய தூதர் மீரா சங்கர் உட்பட 25 பேர் பெண்கள் என அந்நாட்டு பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

இது குறித்து வோஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தி அமெரிக்க தலைநகரான வோஷிங்டனில் தற்போது 182 வெளிநாட்டு தூதர்கள் உள்ளனர். இவர்களில் 25 பேர் பெண்கள். இந்தியாவின் மீரா சங்கர், ஓமன் நாட்டை சேர்ந்த ஹுனைனா சுல்தான் அல்-முகைரி, கொலம்பியாவின் கரோலவினா பார்கோ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

ஓமன் நாட்டின் ஹுனைனா சுல்தான் அல்-முகைரி அரபு நாட்டில் இருந்து நியமிக்கப்பட்ட முதல் பெண் தூதர் கரோலவினா பார்கோ இலத்தீன் அமெரிக்காவை சேர்ந்த ஒரே பெண் தூதர்.

வோஷிங்டனில் உள்ள வெளிநாட்டு தூதர்களில் 25 பேர் பெண்கள் என்றாலும் அவர்கள் மொத்த எண்ணிக் கையுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவாக உள்ளனர்.

எனினும் பெண் தூதர்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தான் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மொசாம்பிக் தூதர் அமிலியா மாடோஸ் சும்பானா கூறுகையில்,

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சராக ஹிலாரி கிளின்டன் மிகவும் வெளிப்படையாக செயல்படுக்கிறார். இதனால் அதிபர்கள் வோஷிங்டனுக்கான தூதராக பெண்களை எளிதாக தேர்வு செய்கின்றனர் என்றார். இவ்வாறு அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. (2-6)

# அல்கொய்தா தீவிரவாதிகள் பிரான்சுக்கு காலக்கெடு

(டுபாய்)

பிரான்ஸ் நாட்டுக்கு அல்கொய்தா தீவிரவாதிகள் 20 நாள் கெடு விதித்துள்ளனர். வட மேற்கு ஆபிரிக்காவில் உள்ள மாலி நாட்டில் தங்கி இருந்த பிரான்ஸ் நாட்டுக்காரர் பியர் காமத் கடத்தப்பட்டார். அல்கொய்தா தீவிரவாதிகள் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 25ஆம் திகதி தான் அவரை பிணைக் கைதியாக பிடித்து சென்று உள்ளனர்.

அவரை விடுவிக்க வேண்டுமானால் 20 நாட்களுக்குள் சிறையில் இருக்கும் 4 அல்கொய்தா தீவிரவாதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று அல்கொய்தா தீவிரவாதிகள் பிரான்சுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை கடந்த மே மாதம் இங்கிலாந்து பிணைக் கைதியான எட்வின் டயரை அல்கொய்தா தீவிரவாதிகள் தூக்கிலிட்டு கொன்றமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# மலேசியாவுக்கு சுற்றுலா சென்ற 40 ஆயிரம் இந்தியர்கள் மாயம்

(கோலாலம்பூர்)

மலேசியாவுக்கு சுற்றுலா சென்ற 40 ஆயிரம் இந்தியர்கள் மாயமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது குறித்து அந்நாட்டு பிரதமர் நஜீப்தன் ரசாக் அளித்த பேட்டியில்,

இந்தியர்கள் மலேசியாவுக்கு சுற்றுலா வரவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். நாங்கள் தாராளமாக நடந்து கொள்கிறோம். ஆனால் அவர்கள் சரியான முறையில் நடந்து கொள்ள வேண்டும் என விரும்புகிறோம்.

ஆனால் மலேசியாவுக்கு சுற்றுலா வந்த 40 ஆயிரம் இந்தியர்கள் மாயமாகியுள்ளனர். இந்த விவரம் சுற்றுலா விசா காலாவதியான பிறகு எடுக்கப்பட்ட அரசின் பதிவேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாயமானவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள். இவர்கள் இந்தியா திரும்பி இருக்கலாம் அல்லது இங்கேயே தங்கியிருக்கலாம் .இது போன்ற பிரச்சினை சென்னையில் இருந்து வரும் சுற்றுலா பயணிகளால்தான் ஏற்படுகிறது.

டெல்லி, மும்பை, பெங்களூர் போன்ற நகரங்களில் இருந்து வருபவர்களால் எந்த பிரச்சினையும் இல்லை. இந்தியாவில் இருந்து வரும் பலர் இங்குள்ள கோவில்களில் பூசாரிகளாகவும் மற்றும் சலவை தொழிலாளர்களாகவும் பணிபுரிகின்றனர் என்றார். (2-6)

# உலகின் சிறந்த நாடு எது முதலிடத்தில் பிரான்ஸ்

உலகின் சிறந்த நாடுகள் பட்டியிலில் பிரான்ஸ் முதலிடம் பிடித்துள்ளது.

சர்வதேச சுற்றுலா வாரஇதழ் ஒன்று மக்களின் வாழ்க்கைத் தர அடிப்படையில் 2010 ஆம் ஆண்டின் சிறந்த நாடுகள் பட்டியலை வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் ஏனைய நாடுகளான அவுஸ்திரேலியா , சுவிட்சர்லாந்து, ஜேர்மனி உள்ளிட்ட நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளன. அமெரிக்கா 7ஆவது இடத்தில் உள்ளது.

உலகின் 194 நாடுகளை 8 பிரிவுகளில் வகைப்படுத்தி 30 ஆவது ஆண்டாக இப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் வாழ்வாதாரம், கலாசாரம், பொருளாதாரம், சுகாதாரம், உள்கட்டமைப்பு, பருவநிலை போன்றவை முக்கிய அம்சமாக கொள்ளப்படுகிறது.



இவை அனைத்திலும் இந்தியாவுக்கான புள்ளிகள் அதிகரித்துள்ளன. வாழ்வாதார பிரிவில் இந்தியா 65 புள்ளிகளைப் பெற்றுள்ளது. இது கடந்த ஆண்டை விட கூடுதலாகும். வாழ்வாதாரம் அதிகம் தேவைப்படும் நாடுகளில் ஈராக் முதலிடத்திலும் ஆப்கானிஸ்தான் 2ஆவது இடத்திலும் உள்ளன.

இப்பிரிவில் பூட்டான் , பாகிஸ்தான் , வங்கதேசம், நேபாளம்,இலங்கை, மாலைதீவு, பர்மா ஆகிய நாடுகள் முறையே 80,56,65,73,64, 63,75 புள்ளிகளைப் பெற்றுள்ளன.

இடர் மற்றும் பாதுகாப்பு பிரிவில் பூட்டான் , மாலைதீவுகள் உள்ளிட்ட 55 நாடுகள் 100 புள்ளிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளன. ஆனால் ஈராக் ,ஈரான் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகள் இப்பிரிவில் பூஜ்ஜியம் புள்ளிகளையே பெற்றுள்ளன.

இதில் இந்தியா மற்றும் நேபாளம் 64 புள்ளிகளையும்,இலங்கை 71 புள்ளிகளையும்,பர்மா மற்றும் வங்கதேசம் 57 புள்ளிகளையும் பெற்றுள்ளன.

அரசின் பல்வேறு வகையான புள்ளி விவரங்களை ஒப்பிட்டுப் பார்த்து தான் இப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதாக அதன் வெளியிட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-6)



காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடத்திய பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வும் நிகழ்வில் தொழிலதிபர் எஸ்.சிவநேசன் மங்கல விளக்கேற்றுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட காரைநகர் உதவி அரசாங்க அதிபர் ஆர். ரி.ஜெயசீலன், கலாமன்ற ஆசிரியர் செல்வி லீலாவதி இராசரத்தினத்திற்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் கலாமன்ற மாணவிகளின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## அபிவிருத்தி மீள் நிர்மாண செயற்றிட்டங்களை முன்னெடுக்க ஜப்பான் நிதியுதவி

(கொழும்பு)

நாட்டின் ஐந்து மாவட்டங்களில் அபிவிருத்தி மற்றும் மீள் நிர்மாண செயற்றிட்டங்களை முன்னெடுப்பதற்காக ஜப்பானிய அரசாங்கம் 103 மில்லியன் ரூபாவினை நிதியுதவியாக வழங்கியுள்ளது.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் குன்யோ டக்காஷி நேற்று முன்தினம் இது தொடர்பிலான செயற்றிட்டங்களுக்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார்.

மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் செயற்றிட்டத்துக்கு 77 மில்லியன் ரூபாவும் யாழ்ப்பாண சமூக பொருளாதார நலனைக் கருத்திற்கொண்டு முழு கிராமத்தையும் மீள் நிர்மாணம் செய்வதற்காக 11.3.மில்லியன் ரூபாவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் விவசாய உட்கட்டமைப்புகளை அபிவிருத்தி செய்வதற்காக சர்வோதய மன்றத்துக்கு 10 மில்லியன் ரூபாவினையும் மாத்தறை மாவட்டத்தில் பெண்களின் பொருளாதாரத்தை வலுவூட்டல், கருவாடு உற்பத்தியை அதிகரித்தல் செயற்றிட்டத்தை அமுல்படுத்த 4.7 மில்லியன் ரூபாவையும் ஜப்பானிய தூதரகம் ஒதுக்கீடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (2-6)

# சகல இன மக்களுக்கும் சமமான உரிமை வழங்குவோம்

## -சரத் பொன்சேகா-

(கொழும்பு)

இலங்கையில் வாழும் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வு வழங்காது அரசியல் சாசனத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி அதனூடாக நிரந்தரத் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு சிறுபான்மை மக்களின் அரசியல் கலாசாரம் பண்பாட்டு மரபுரிமைகள் மற்றும் பாதுகாப்பு என்பன உறுதி செய்யப்படும் என எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி பொது வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகா தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் வெற்றி பெற்றால் இலங்கையில் இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்படுமென அரசாங்கம் மேற்கொள்ளும் பிரசாரங்களை நம்பி பொது மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. ஜனநாயக ஆட்சி எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை தற்போதைய அரசாங்கத்திற்கு எதிர்வரும் நாட்களில் கற்பிப்போம் எனவும் அவர் கூறினார்.

சிறுபான்மை இன சமூகத்தைச் சார்ந்த பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் ஜெனரல் சரத்பொன்சேகா தமது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார். இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே ஜெனரல் சரத்பொன் சேகா மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கையின் அரசியல் கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தி சகல இன மக்களுக்கும் சமமான உரிமைகளை வழங்கி கேள்விக்குறியாகிப்போயுள்ள ஜனநாயகத்தை ஸ்தாபிப்பதே எனது அரசியல் பிரவேசத்தின் பிரதான நோக்கம் .

ஆனால் இன்று அரசாங்கம் பொய்ப் பிரசாரங்களை மேற்கொண்டு சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்கோ அல்லது நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்கோ தீர்வுகளை ஏற்படுத்தாமல் தேர்தல் வெற்றிகளை மாத்திரம் கருத்தில் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

எனது வெற்றியின் பின் ஒரு போதும் இராணுவ ஆட்சி ஏற்படாது. ஏனென்றால் நான் தற்போது இராணுவ அதிகாரியல்ல. மாறாக ஜனநாயகவாதியே. என்னை இராணுவ ஆட்சியாளர் என்று கூறும் அரசாங்கம் எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் 5 இராணுவ அதிகாரிகளை களமிறக்க உள்ளது.

உண்மையில் தற்போதைய அரசாங்கம் தான் இராணுவ ஆட்சியொன்றை முன்னெடுத்து வருகின்றது. எவ்வாறாயினும் இலங்கையில் பல்லினம் வாழும் ஒரு சூழல் உள்ளமையால் அதனடிப்படையில் அரசியல் மற்றும் பொருளாதார செயற்பாடுகளை ஏற்படுத்த வேண்டும் என கூறினார். (2-6)




சித்தங்கேணி

அருள்மிகு ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த

## தைப் பொங்கற் பெருவிழா-2010

நாககன்னியம்பாள் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான விரோதி வருடத் தைத்திங்களில் கொடியேற்றத்தோடு (14.01.2010) வியாழக்கிழமை அன்று பூராட நட்சத்திரம் கூடிய தைத்திங்கள் முதல் நாள் காலை 8.30 மணியளவில் அபிஷேக அலங்காரத்தோடு சோட சதீப தூபங்களோடு நாககன்னியம்மன் நாகத்தில் திரு வீதியுலா எழுந்தருளி தீமிதிப்பு வைபவம் நடைபெறும். அடியார்கள் அனைவரும் கலந்து எம் பெருமாட்டியைத் தரிசித்து பேரானந்தப் பெரு வாழ்வு பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

★ தைப்பொங்கல்: 14.01.2010 தை முதல் வியாழக்கிழமை பெருவிழாவும் 12.00 மணியளவில்

## தீ மிதிப்பு வைபவம்

★ தீர்த்தம், கொடியிறக்கம்: 21.01.2010 வியாழக்கிழமை வைரவமடையும் நடைபெறும்.

கிரியைகளை சிறப்புற நிகழ்த்துபவர்
ஆலய பிரதம சித்த ஞானகுரு இந்திரன் ஐயா

பஜனைப் பாடல்களும் சிறப்பு சைவச் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

ச.ஐங்கரன்
சுப்ரா கல்வி நிலையம்.

சித்தங்கேணி
அருள்மிகு ஸ்ரீ நாக கன்னியம்பாள் ஆலயம்.


# ஓமந்தை-பளை ரயில் பாதை புனரமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்து

## இந்தியா 185 மில்.அமெ.டொலரை வழங்கவுள்ளது

(கொழும்பு)

வட குதியல ஓமந்தைககும் பளைக்கும் இடையிலான ரயில் பாதையைப் புனரமைப்பதற்கான வர்த்தக உடன்படிக்கை ஒன்று நேற்று முன்தினம் போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா ஆகியோர் முன்னிலையில் போக்குவரத்து அமைச்சு அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

ரயில் பாதை அமைப்பு வேலைகளை மேற்கொள்ள இருக்கும் இர்கோன் இன்ரர் நெஷனல் என்ற இந்திய அரசாங்க அமைப்பின் சார்பில் எஸ்.எல். குப்தாவும் இலங்கை ரயில்வேயின் சார்பில் பி.பி. விஜேசேகரவும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார்கள்.

2004ஆம் ஆண்டு சுனாமியின் போது மிக மோசமாகச் சேதமைந்த தென்பகுதி ரயில் பாதையைப் புனரமைப்பதற்கு முன்னர் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகளுக்கு மேலதிகமாக நேற்று முன்தினம் உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒப்பந்த கைச்சாத்து வைபவத்தில் இந்தியத் தூதுவர் காந்தா உரையாற்றுகையில், போக்குவரத்து தொடர்பான உட்கட்டமைப்பை புனர்நிர்மாணம் செய்வது வாழ்வாதார நடவடிக்கைகளை உருவாக்கி ஊக்குவிக்கும் என்பதால் வடமாகாணத்தில் வழமையான பொருளதார வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு இது அத்தியாவசியத் தேவையாகும்.

வட மாகாணத்தைப் புனரமைக்கும் முக்கிய பணியைப் பொறுப்பேற்கும் இந்தியா தொடர்ந்து இலங்கைக்கு உதவி வழங்க உறுதிபூண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

### பொத்துவில் தேர்தல் தொகுதியில் முறைகேடுகள் இடம்பெறக்கூடும் முஸ்லிம்காங்கிரஸ் எச்சரிக்கை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் போது பொத்துவில் தேர்தல் தொகுதியில் முறைகேடுகள் இடம்பெறக் கூடுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக பொத்துவில் தேர்தல் தொகுதியின் திகாமடுல்ல மாவட்டத்தின் சில வாக்களிப்பு நிலையங்களில் முறைகேடுகள் நடைபெறக் கூடிய சாத்தியம் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

முன்பு கிழக்கு மாகாணசபைத் தேர்தல்களின் போது முறைகேடுகள் இடம்பெற்றதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய விநாயகபுரம் மகாவித்தியாலயம், கோரைகலப்பு சக்தி வித்தியாலயம், பரமேஸ்வர வித்தியாலயம், தாண்டியடி விக்கேனஸ்வரா வித்தியாலயம், திருக்கோயில் மெதடிஸ்த வித்தியாலயம், திருக்கோயில் குமார வித்தியாலயம், கையலதீவு வடிவேல் வித்தியாலயம் மற்றும் வேர்ல்ட் விசன் பாலர் பாடசாலை ஆகிய வாக்களிப்பு நிலையங்களில் முறைகேடுகள் நடைபெறக்கூடுமென கட்சியின் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார். (2-6)

# சொந்த இடங்களில் குடியமர்த்தாமல் நியாயமான தீர்வை எவ்வாறு காணமுடியும்

## ஜே.வி.பி. தலைவர் கேள்வி



(கொழும்பு)

தமிழ் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த முடியாத ஜனாதிபதியால் எவ்வாறு அம்மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வை வழங்க முடியும் என ஜே.வி.பி. தலைவர் சோமவன்ச அமரசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெளிவுபடுத்திய அவர், யுத்தம் முடிந்து ஆறு மாதங்களுக்குள் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள தமிழ் மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

இன்று யுத்தம் முடிந்து எட்டு மாதங்கள் கழித்தும் அம்மக்களை சொந்த இடங்களில் மீளக்குடியேற்றவில்லை.

மாறாக ஜனாதிபதித் தேர்தலைக் கருத்தில் கொண்டு அவசர அவசரமாக சேற்றுக் குழிகளுக்குள்ளும் சிறிய கூடாரங்களிலும் பாடசாலைகளிலுமே அவர்கள் தங்கவைக்கப் பட்டுள்ளனர்.

எதுவிதமான திட்டமும் இன்றி வீடு வாசல்கள் இல்லாது தமிழர்கள் நாடோடிகளைப் போல் வாழ்கின்றனர்.

அத்தோடு தமிழ் மக்கள் இன்னும் அடிமைகளைப் போன்று முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். காட்சிப் பொருட்களாக தமிழ் மக்கள் வதைபடுகின்றனர். தமிழ் மக்களை அவர்கள் சொந்த இடங்களில் மீளக்குடியேற்றுவதாக வழங்கிய குறைந்த பட்ச உறுதிமொழியைக்கூட நிறைவேற்ற ஜனாதிபதியால் முடியவில்லை.

இவ்வாறான ஜனாதிபதியால் நீண்டகால தேசிய பிரச்சினைக்கு எவ்வாறு அரசியல் தீர்வை வழங்க முடியும்.

எனவே தமிழ் மக்கள் சிந்திக்கவேண்டும். பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா மக்களின் மீளக்குடியேற்றம் மற்றும் கைது செய்யப்பட்டவர்கள் மீதான விசாரணைகள், புனர்வாழ்வளித்தல் தொடர்பாக தெளிவான திட்டங்களை முன்வைத்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு இன்று முதல் தேவை ஜனநாயகமும் சம அந்தஸ்துமாகும். அதனை வழங்குவதே ஜெனரல் பொன்சேகாவின் முதல் பணியாகும்.

அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக அகற்றப்படுமென்றும் புலிச் சந்தேக நபர்கள் விசாரணை செய்யப்பட்டு குற்றமற்றவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் ஏனையோருக்கு புனர்வாழ்வளிக்கப்படுமென்றும் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்த பின்னர் ஜனாதிபதி அவசர அவசரமாக 750 புலிச் சந்தேக நபர்களை விடுதலை செய்துள்ளார். அதி உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்குவதாகத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும். இவையனைத்தும் தேர்தல் கால ஏமாற்று வித்தைகள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றார். (2-6)

# பொதுச் சொத்துக்களை பாதுகாக்க முப்படையினரின் ஒத்துழைப்பு

**உதய நாணயக்கார**

பொது சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு முப்படையினரின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக மிக முக்கியமான பொதுச் சொத்துக்களை பாதுகாப்பதற்கு முப்படையினரும் காவல் துறையினரும் கூட்டாக இணைந்து விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தற்போது பொதுச் சொத்துக்களுக்கு சேதங்களை ஏற்படுத்த சில அரசியல் சக்திகள் முனைப்பு காட்டி வருவதாக புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் குறிப்பாக மேம்பாலங்களை சேதப்படுத்த சிலர் சதித் திட்டம் தீட்டியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1988/89 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இலங்கையில் ஏற்பட்ட குழப்ப நிலைமையை மீண்டும் உருவாக்குவதற்கு சிலர் தீவிரம் காட்டி வருவதாகவும் இவ்வாறான கிளர்ச்சிகளை கட்டுப்படுத்த விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுச் சொத்துக்களுக்கு எவரேனும் சேதம் விளைவிக்க முயற்சி மேற்கொண்டால் மக்கள் அருகில் உள்ள காவல்துறை நிலையத்திற்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

# காலி முகத்திடல் வீதி ஊடாக பஸ் போக்குவரத்துக்கு அனுமதி

(கொழும்பு)

பாதுகாப்புக் காரணங்களுக்காக மூடப்பட்டிருந்த கொள்ளுப்பிட்டி சந்தியிலிருந்து காலி முகத்திடல் வரையிலான காலி வீதியில் பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் பயணிப்பதற்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுமார் மூன்று வருடங்களுக்கு மேலாக காலி வீதியில் குறித்த பகுதியில் பொதுப் போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்தத் தடையில் சிறிது தளர்வினை ஏற்படுத்திய பாதுகாப்பு அமைச்சு, கொள்ளுப்பிட்டிச் சந்தியிலிருந்து காலிமுகத்திடல் ஊடாக போக்குவரத்துக்கு வீதி திறந்து விடப்பட்டிருந்த போதிலும் பஸ் போக்குவரத்துக்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் காலி முகத்திடல் வீதியூடான முழுமையான போக்குவரத்துக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடல் வீதியூடாக பயணிகள் பஸ் போக்குவரத்துக்கு காலை 6 மணிமுதல் இரவு 8 மணி வரையில் மாத்திரமே அனுமதிக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம். கருணாரத்ன தெரிவித்துள்ளார். (6)

# எந்தவொரு சிறுபான்மை இனத்தவருக்கும் அநீதி இழைக்க விடமாட்டோம்

(கொழும்பு)

எந்தவொரு சிறுபான்மை இனத்திற்கும் அநீதி இழைக்கப்பட சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ற வகையில் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்தக்கூடிய வழிவகைகள் உருவாக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் உள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவின் தேர்தல் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் பதவிப் பிரமாணம் ஏற்றுக் கொண்டு 24 மணித்தியாலயங்களுக்குள் அரசியல் தலையீடு காணப்படும் நிறுவனங்களின் அரசியல் தலையீடுகள் அகற்றப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் குறுகிய காலத்தில் சம்பள உயர்வு மற்றும் பொருட்களின் விலை குறைப்பை ஏற்படுத்தி நீண்ட கால பொருளாதாரத் திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் சிறுபான்மை மக்களின் அடையாளங்களை பேணக்கூடிய ஓர் சூழ்நிலை உருவாக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## விளா

Botanical Name- Feronia elephantum
Family - Rutaceae
Engl - Wood apple
Sinh - Divul

முள்ளுடைய இலையுதிர் மரமாகும் ; 20 மீற்றர் உயரம் வளரக்கூடியது ; பட்டை அதிக ஆழமின்றி பிளவுபட்டிருக்கும் ; இலைகள் மாற்று இலை அருக்கில் அமைந்தவை ; கூட்டிலை ஒற்றை சிற்றிலையில் முடியும் இறகுவடிவான கூட்டிலை. இலைக் கோணத்தில் முட்கள் உள்ளன ; வலுவானவை ; நேரானவை ; சிற்றிலைகள் 3-9 ; ஆப்பு வடிவானவை.

இலைக்காம்புகள் - இறகு கொண்டவை. மலர்கள் இருபாலானவை. கனிகள் பெரியாவை ; 8.செ.மீ விட்டமுடையவை ; கோண வடிவான கனிந்த கனியில் மேல் உறை ஓடு போன்றது. ஓரறை கொண்டது ; விதைகள் பல ; நீள்வட்ட வடிவின ; அமுங்கியவை ; தை இலிருந்து சித்திரையில் மலர்வன.


**பரம்பலும் இனவிருத்தியும்**

இது ஓர் வெப்பமண்டல பழமரமாகும். எல்லாவகை மண்களிலும் வளரும். பொதுவாக விதை மூலமாக இனவிருத்தியடைகின்றது. வேர்விட்ட மரத்துண்டுகள், பதியன்கள் பயன்படுத்தப்படுகின்றன.

விதைத்த ஓராண்டிற்கு பின் நாற்றுக்கள் பிடுங்கி நடப்படுகின்றன. நட்ட 5 ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கும். இம்மரம் வறட்சியைத் தாங்கி வளரும்.

**100 கிராம் விளாம்பழத்திலுள்ள சத்துக்கள்**

புரதம் (கி) - 7.1, கொழுப்பு (கி) - 3.7, நார்ப்பொருள் (கி) - 5.0, காபோவைதறேற்று (கி) - 18.1, கல்சியம் (மி.கி) - 130, பொஸ்பரஸ் (மி.கி) - 110, தயமின் (மி.கி) - 0.6, ரைபோபிளேவின் (மி.கி) - 0.04, விற்றமின் 'சி' (மி.கி.) - 3, ஒக்ஸாலிக்கமிலம் (மி.கி) - 272, கரோட்டின் (மைக்ரோகிராம்) - 61.



**மருத்துவப் பயன்கள்**

⁜ விளாம்பழத்திற்கு சூட்டைத்தணித்து குளிர்ச்சியைத் தரும் தன்மையுண்டு. பழம் உடலுக்கு வலுவைக் கொடுக்கும். கல்லீரல் நோய்க் கோளாறுகள், இருமல், இருதய நோய்கள், வாந்தி, களைப்பு தாகம் தீரும்.

⁜ பழச்சதையினைச் சாப்பிட தொண்டைப்புண் குணமாகும்.

⁜ விளாம்பழத்துடன் சர்க்கரை சேர்த்து தினமும் காலையில் சாப்பிட பித்த நோய்கள் தீரும்.

⁜ பழத்தின் மணப் பாகு பித்த நோய்களை போக்கும்.

⁜ விளாம்பழத்தைச் சுட்டு அதன் சதையை எடுத்து மிளகாய், வெங்காயம், உப்பு, கொத்தமல்லி, துவரம் பருப்பு வறுத்து சேர்த்து துவையல் அரைத்து உணவுடன் சாப்பிடலாம் பித்த நோய்கள், தலைச் சுற்று நீங்கும்.

**உணவுப் பொடி**

விளாந்தளிர், நாரத்தையின் தளிர், கறிவேப்பிலை, எலுமிச்சையிலை ஒரே அளவு உலர்த்திய பொடி 100 கிராம், மிளகு 10 கிராம், வெந்தயம் 10 கிராம், கடலைப்பருப்பு வறுத்த பொடி 100 கிராம், உப்பு 20 கிராம் சேர்த்து கலந்த பொடி உணவில் சேர்த்து சாப்பிட உடலுக்கு ஊட்டமுண்டாக்கும்.

⁜ இதன் தளிர் இலையை அரைத்து 10 கிராம் மோரில் 3 வேளை சாப்பிட வயிற்றோட்டம் தணிந்து வயிற்றுக் கடுப்பு குணமாகும்.

⁜ குட்டிவிளா என்பது தரையோடு படர்ந்திருக்கும் விளாவின் இளஞ்செடியாகும். இவ் இலைகளை சேகரித்து குழந்தைகளின் உடலில் தேய்த்து குளிப்பாட்ட தோல் நோய்கள் வராது.

⁜ விளாங்காயை உடைத்து உள்ளே உள்ள சதையை எடுத்து அம்மியில் வைத்து மைபோல அரைத்து அரை டம்ளர் அளவு தயிரில் கலந்து 3 நாள் கொடுக்க சீதபேதி தீரும்.

⁜ இதன் இலைச்சாற்றை பித்தவெடிப்புக்கு பூசலாம்.

⁜ இலைக்கொழுந்தை நன்றாக அரைத்து உடலின் மீது உண்டாகி இருக்கும் வியர்க்குருவிற்கு பூசலாம்.

⁜ **விளாம்பிசின் :**

பிசினை பாலில் ஊற வைத்து சீனி கலந்து அருந்த நரம்புத்தளர்ச்சி, பலக் குறைவு, வெள்ளை நோய் தீரும். நீரிழிவு நோயாளிகளும் பயன்படுத் தலாம்.

அவர்கள் பிசினை ஆடை நீக்கிய பாலில் ஊறவைத்து எடுத்தல் வேண்டும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

⁜ விளாமரப்பிசினை உலர்த்தி பொடித்து தினம் காலையில் 1-2 கிராம் அதை தேனில் குழைத்து எடுக்க வறட்டிருமல், நெஞ்செரிவு, காய்ச்சல் ஆகியன தீரும்.

# 2010 புத்தாண்டு பலன்கள்

## கும்பம்

**(அவிட்டம் 3ஆம், 4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி முதலாம், 2ஆம், 3ஆம் பாதங்கள் வரை)**
**வசதி வாய்ப்புகள் பெருகும்!**

பொதுநலத்தில் அதிக அக்கறை காட்டிப் புகழ் குவிக்கும் கும்ப ராசி நேயர்களே!

வந்துவிட்டது புத்தாண்டு. வளர்ச்சி கூடப் போகின்றது. சிந்தனை அனைத்தும் செயலாகும் விதத்தில் குருவின் பார்வை சந்திரனின் மீது பதிவாகிறது. வந்த துயரங்கள் வாயிலோடு நின்றுவிடும். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தை ஜென்ம குரு மாற்றிவிடும்.

எனவே கவலைகளிலிருந்து விடுபட்டு கனிவுமிக்க வாழ்க்கையைக் காணப்போகிறீர்கள். குவலயம் போற்றும் அளவிற்கு உங்கள் புகழ் ஓங்க வேண்டுமானால் உங்கள் குடும்ப உறுப்பினர்களையும், கூட இருப்பவர்களையும் ஆலோசித்து முடிவு எடுப்பது நல்லது.

உங்கள் ராசிநாதனாகச் சனி விளங்குவதால் நிதானம் உங்களோடு இணைந்திருக்கும். நிம்மதி மட்டும் உங்களை விட்டு விலகியிருக்கும். சதாசர்வ காலமும் உங்கள் முன்னேற்றத்திலேயே குறியாக இருப்பீர்கள். வருடத் தொடக்கத்தில் சூரியன், சுக்ரன், புதன், ராகு இலாப ஸ்தானத்தில் இணைகிறார்கள். அத்தோடு ஐந்தாம் இடத்தில் கேதுவும், சந்திரனும் இணைந்துள்ளார்கள்.

எனவே சர்ப்பங்களின் ஆதிக்கத்தில் கிரகங்கள் இருப்பதால் சர்ப்ப சாந்திகளை முறையான ஆலயங்களைத் தேர்ந்தெடுத்து பொருத்தமான நாளில் பரிகாரங்களைச் செய்து வந்தால் சகல யோகங்களும் வந்து சேரும்.

உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும், புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டங்களையும் ஒப்பிட்டு பார்க்க வேண்டும்.

அவை இணைந்து செயற்பாட்டால் துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல் பணிந்து வணங்கிப் பரிகாரங்கள் செய்தால் யோகங்கள் வந்து சேரும். தேக நலனும் சீராகும்.

செல்வ நிலையும் உயரும். வழிபாடுகள் தான் உங்கள் வாழ்க்கையில் வளர்ச்சியைக் கூட்டும் என்பதை அனுபவத்தில் உணர்ந்து கொள்வீர்கள். நாள் பார்த்து வழிபட்டால் அச்சமில்லாத நட்சத்திரம் பார்த்து வழிபட்டால் அச்சமில்லாத வாழ்க்கை அமையும்.

பெயரியல் முறையில், எண்கணிதம் அடிப்படையில், செவ்வாய் சுய ஜாதகத்தில் இருக்கும் பதாசார அடிப்படையில் அம்ச நிலை பார்த்து, அதற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால் வெற்றி மீது வெற்றி வந்து சேரும். வியக்கும் விதத்தில் வாழ்க்கை அமையும். இந்த 2010இல் குருவின் பார்வை உங்கள் ராசிக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் நல்ல மாற்றங்களை வழங்கும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

### 01-01-2010 முதல் 30-04-2010 வரை

இக்காலம் உங்களுக்கு நன்மை தரும் காலமாக அமையும். குருவின் வலிமையால் குழப்பங்கள் அகலும். குடும்பத்தில் அமைதி கூடும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

செவ்வாய் நீச்சம் பெறுவதால் உடன் பிறப்புக்கள் ஒரு சில கருத்துக்களை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எனவே பாகப்பிரிவினைகளில் இழுபறி நிலை ஏற்படலாம். பூர்வீக சொத்துக்களை விற்க நினைத்தாலும் . விற்க இயலாது.

கேது பலத்தால் பிள்ளைகள் வழியில் போராட்டங்கள் ஏற்பட்டு அகலும் சில நல்ல காரியங்கள் நடைபெறுவது போலத் தோன்றி விட்டுப் போகலாம். சனியும் இக்காலத்தில் வக்ரம் பெறுகிறார்.

அஷ்டமத்தில் சனி வக்ரம் பெறுவதால் ஆரோக்கியத்தொல்லை அடிக்கடி வந்து கொண்டேயிருக்கும். எனவே முறையான வைத்தியத்தை மேற்கொண்டு முழுமையாக உடல் நிலையைச் சீராக்கிக் கொண்டால்தான் நிம்மதி உள்ளத்தில் குடியேறும். வரவைக் காட்டிலும் செலவு கூடும் நேரமிது.

குருவின் பார்வை பலத்தால் 5, 7, 9 ஆகிய இடங்களில் புனிதமடைகின்றன. எனவே கல்யாணக் கனவுகள் நனவாகும். வீடு தேடி வரன்கள் வந்து வந்து விலகிச் செல்கின்றனவே என்று நினைத்தவர்கள், இனிச் சந்தோஷம் அடையும் விதத்தில் முடிவாகலாம்.

மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர். கூட்டு முயற்சியில் பிற இனத்தார்களைச் சேர்த்துக் கொண்டால் இலாபம் கிடைக்கும். தனஇலாபாதிபதி உங்கள் ராசியில் சஞ்சரிப்பதால் பணத்தேவைகள் பூர்த்தியாகிவிடும். ஆயினும் வக்ரச் சனியின் ஆதிக்கத்தில் சிக்கல்கள் ஏற்படாமல் இருக்க தக்கவிதத்தில் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது. குறிப்பாக விநாயகப் பெருமான் வழிபாட்டையும், அனுமன் வழிபாட்டையும் விடாது செய்து வரவேண்டும். ஸ்ரீராமஜெயம் சூட்டி ஆஞ்சநேயப் பிரபுவை வழிபாட்டால் ராம பிரான் அருளுக்கும் நீங்கள் பாத்திரமாகலாம். அனுமனும் உங்கள் அல்லல்களைத் தீர்க்க முன்வருவார்.

### 01-05-2010 முதல் 31-08-2010 வரை

இக்காலத்தில் 2, 11இற்கு அதிபதியான குரு வக்ரம் பெறுகிறார். எனவே குடும்பச் சுமை கூடும். கொடுக்கல், வாங்கல்களில் சிக்கல்கள் உருவாகலாம்.

எவ்வளவு பணம் வந்தாலும் தங்கவில்லையே என்று கவலைப்படுவீர்கள். வெளிநாடு சென்றவர்கள் மீண்டும் தாய் நாட்டிற்குத் திரும்பிவரும் சூழ்நிலை உருவாகும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் அலைச்சல் கூடும்.

மீனத்தில் குருவும் இக்காலத்தில் தான் சஞ்சாரீம் செய்கிறார். அவர் உங்களுக்குப் பார்வை பலத்தால் மிகுந்த நன்மைகளை வழங்கப்போகிறார். குறிப்பாக உங்கள் ராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவாகிறது.

எனவே கடன்சுமை குறையும். கவலைகள் தீரும். எதிரிகள் விலகிச் செல்வர். இருக்கும் உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

8ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் இழப்புக்களை ஈடு செய்யும் வாய்ப்பு ஏற்படும். சென்ற ஆண்டில் கிடைக்காத இலாபம் இந்த ஆண்டில் கிடைக்க வைக்கும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். ரண சிகிச்சைகள்கூட சாதாரண சிகிச்சையிலேயே குணமாகும்.

கூட்டு முயற்சிகளிலிருந்து ஒரு சிலர் விலகலாம். பங்குதாரர்கள் விலகினாலும், புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். எனவே சஞ்சலப்பட வேண்டியதில்லை.

10ஆம் இடம் புனிதமடைவதால் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். பழைய தொழிலை மாற்றிப் புதிய தொழில் தொடங்கலாமா என்ற எண்ணம் மேலோங்கும். உத்தியோகஸ்தர்களுக்கும் ஆதிக்கம் இருப்பதால் எந்த மாற்றமும் இனிய மாற்றமாக அமையாது. நடக்கும் தொழிலையே தொடர்ந்து நடத்துவது நல்லது.

நண்பர்களின் ஒத்துழைப்போடு உதிரி வருமானங்களைப் பெருக்கிக் கொள்ளலாம். புதிய தொழில் தொடங்க நினைப்பவர்கள் குடும்ப உறுப்பினர்களில் யாருடைய பெயரில் தொழில் தொடங்கினால் நல்லது என்பதை ஆராய்ந்து தொழில் ஸ்தானம் வலுப்பெற்றவர்களின் பெயரில் தொழிலைத் தொடங்கினால் இனிய எதிர்காலம் அமையும். இக்காலத்தில் சனி வழிபாடும், குரு வழிபாடும் சஞ்சலங்களைத் தீர்க்கும். சந்தோஷங்களைச் சேர்க்கும்.

### 01-09-2010 முதல் 31-12-2010 வரை

இக்காலத்தில் குரு வக்ர கதியில் இயங்குவதால் பணப்புழக்கத்தில் கவனமாக இருப்பது நல்லது. நண்பர்களால் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடலாம்.

அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. இதன் மூலம் ஆதாயம் அதிகம் வந்து சேரும். சனியும் வக்ர நிவர்த்தியாகிவிட்டதால் நன்மைகளே உங்களுக்கு வந்து சேரும்.

செப்டெம்பர் மாதக் கடைசியில் செவ்வாயும், சுக்ரனும் துலாத்தில் இணைகிறார்கள். அக்டோபர் மாதக் கடைசியிலும் சூரியன், சுக்ரன், புதன் ஆகிய மூன்று கிரகங்களும் துலாத்தில் இணைந்து உலா வருகிறார்கள். இந்தக் கூடடுக்கிரக யோகம் உங்களுக்குக் கூடுதலான நற்பலன்களை வழங்கும். வீடு வாங்கும் முயற்சியிலும் வெற்றி கிடைக்கும். வேண்டிய பதவிகளும் வந்து சேரும். நாடு விட்டு நாடு செல்பவர்களுக்கும் நல்ல தகவல் கிடைக்கும்.

நல்ல காரியங்கள் இல்லத்தில் நடக்கும். பௌர்ணமி நாளில் கிரிவலம் வருவதன் மூலம் பலன்களை நல்ல பலன்களாக வரவழைத்துக்கொள்ளலாம்.

ஆண்டின் தொடக்கம் முதல் தொடர்ந்து நற்பலன்கள் கிடைக்க விஷ்ணு வழிபாடும், இலக்குமி வழிபாடும் உங்களுக்குத் தேவை. பெருமாள் வழிபாடு பெருமை சேர்க்கும்.

**சிவல்புரி சிங்காரம்**

பெண்களுக்கு ஆண்டின் தொடக்கத்தில் அதிக விரயங்கள் ஏற்படலாம். அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கத்தால் பணப்பற்றாக்குறை உருவாகும்.

திட்டமிட்டுச் செலவு செய்ய இயலாது. குடும்பத்தினரை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. குல தெய்வ வழபாட்டில் ஆர்வம் காட்டுவது நல்லது. மே மாதத்திற்கு மேல் பணப்புழக்கங்கள் அதிகரிக்கும். நகையும், தொகையும் வந்து சேரும்.


பிரபலங்கள் உங்களுக்கு உறு துணையாக இருந்து பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பர். ராகு-கேதுக் களுக்குரிய சர்ப்ப சாந்திகளைச் செய்து கொண்டால் சந்தோஷங்கள் ஏற்படும்.

(தொடரும்)

---

# நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும்

## சரத் பொன்சேகா



(கொழும்பு)

நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இதற்கமைய 17 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் நல்லாட்சிப் பொறிமுறையை நடைமுறைப்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவிசாவளைப் பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் நாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கிலேயே எதிர்க்கட்சிகள் கூட்டாக இணைந்து செயற்பட்டு வருவதாகவும் ஜனநாயகம், நல்லாட்சி, சட்டம், ஒழுங்கு மற்றும் சமாதானத்தை நிலைநாட்ட அர்ப்பணிப்புடன் செயற்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தாம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் உடனடியாக தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-6)

---

# இடம்பெயர்நிலை ஆசிரியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்க வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

மீள் குடியேற்றப் பிரதேசங்களில் கற்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆசிரியர்களின் நிலைமைகளைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு விசேட கொடுப்பனவு ஒன்றை வழங்குமாறு இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டார்லின் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த நிலையில் வடக்கின் முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளிலும் அத்துடன் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களில் அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளிலும் கற்பித்து வருகின்ற ஆசிரியர்கள் பல்வேறு சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

வவுனியா முகாம்களில் இருக்கின்ற ஆசிரியர்கள் மற்றும் முகாம்களில் இருந்து யாழ். மாவட்டத்தில் குடியேறியுள்ள ஆசிரியர்கள் தினமும் கிளிநொச்சி - முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. (2-6)

---

# சுற்றாடல் பாதுகாப்பு வரி மீளளிப்பு

யாழ்ப்பாண பிரதேச செயலகத்தில் மோட்டார் போக்குவரத்து கிளையினூடாக 2010 ஆம் ஆண்டுக்குரிய வாகன வருமான வரி செலுத்தும்போது சுற்றாடல் பாதுகாப்பு வரியினை 01.01.2010, 04.01.2010 ஆகிய தினங்களில் மாத்திரம் செலுத்தியவர்கள் (மோட்டார் சைக்கிள், மோட்டார் கார்) தாங்கள் பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்து பிரிவிற்கு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை சமூகமளித்து மேற்படி வரியினை மீளப்பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ். பிரதேச செயலர் கோரியுள்ளார். (2)

மேலான மனிதன் எப்பொழுதும் அறம் பற்றியே சிந்திக்கிறான். கீழான மனிதன் சுகம் பற்றியே சிந்திக்கிறான்

-கன்பூஷியஸ்

வலம்புரி

## ஆன்மீகச் செழுமை ஏற்றி இளம் சமூகத்தை வழிப்படுத்துவோம்

தமிழர் பண்பாடு என்ற பெருமை பேச்சளவில் மட்டுமே இருக்கும் போல் நிலைமையுள்ளது.

அந்தளவிற்கு எங்கள் பண்பாட்டில் தேய்வுகளும் சிதைவுகளும் தாராளமாக ஏற்பட்டுள்ளன.

நவீன தகவல் தொழில் நுட்பத்தின் ஆக்கிரமிப்புக்களும், தொடர்பாடல் சாதனங்களின் ஊடுருவலும் எங்கள் பண்பாட்டுச் சிதைவுக்குப் பாரிய பங்கை வகித்ததெனலாம்.

இதற்கு மேலாக யுத்தத்தால் ஏற்பட்ட இடப்பெயர்வுகள், கூட்டுக் குடும்ப வாழ்க்கையின் முடிபுகள், காலகாலமாக கட்டிக்காத்த கிராமிய பண்பாட்டு மறைவுகள் என எல்லாமும் சேர்ந்து எங்கள் தமிழ் பண்பாட்டை வேரறுக்க முற்பட்டுள்ளன.

உலகம் முழுவதும் போற்றுதற்குரிய எங்கள் பண்பாட்டின் வேரறுப்பை தடுக்க அதீத பிரயத்தனம் செய்ய வேண்டிய தேவையுள்ளது.

தமிழ்ப் பண்பாடு உயர் பெறுமானம் உடையதெனப் பெருமை பேசுவதோ! அந்தப் பெறுமானம் சிதைவுறுகிறதெனக் கவலை கொள்வதோ! அதனைக் காப்பாற்றுவதற்கான வழியாகாது.

எங்கள் பண்பாடு தழைக்க வேண்டுமாயின், வேரறுப்பு நின்று விருட்சமாக வேண்டுமாயின் பொது அமைப்புகள் அனைத்தும் விழிப்படைய வேண்டும்.

குறிப்பாக பாடசாலைகள், ஆலயங்கள், சமய அமைப்புகள் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது கட்டாயமானதாகும்.

எங்கள் தமிழ்ப் பண்பாடு எழுச்சி பெறவேண்டுமாயின், உலகெங்கும் கொடிகட்டிப் பறக்கவேண்டுமாயின் இளம் சமூகம் தமிழ்ப் பண்பாட்டின் பெருமைகளை உணரத் தலைப்படுவது அவசியம்.

இன்றைய எங்கள் தமிழ்ப்பண்பாடு முதியவர்களிடம் இருந்து இளையவர்களிடம் கையளிக்கப்படாத சொத்தாக இருப்பது மிகவும் வேதனைக்குரியது.

இத்தகைய கையளிக்கப்படாத சொத்துக்கள் பரம்பரை இடைவெளிகளை ஏற்படுத்திவிட்ட உண்மைகளை மறப்பதற்கில்லை.

எனவே எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் சைவத்தமிழ்ப் பண்பாட்டை இளைஞர்களிடம் கையளிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முதற்கட்டமாக இந்து அமைப்புகளின் ஒன்றியம் நல்லை ஆதீனத்தில் வெள்ளிக்கிழமை மாலை தோறும் ஆன்மீகக் கருத்தரங்குகளை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

2010ஆம் ஆண்டின் தைப்பிறப்போடு வருகின்ற முதல் வெள்ளிக்கிழமை நல்லை ஆதீனத்தில் ஆரம்பமாகும் ஆன்மீகக் கருத்தரங்கில் எங்கள் இளம் சமூகம் பங்குபற்றி பயன்பெற வேண்டும்.

ஆன்மீகச் சித்தனைகளே மனித சமூகத்தை நெறிப்படுத்துகின்றன என்ற உண்மைப் பொருள் மறப்பதற்குரியதல்ல. உலகில் எந்தெந்த நாடுகள் ஆன்மீகப் பஞ்சத்தில உழலுகின்றனவோ அந்த நாடுகளிளேயே மனித அழிவுகளும், நெட்டூரங்களும் தலைவிரித்தாடுகின்றன.

எனவே ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்துவதன் மூலமே மனித சமூகத்தை, குறிப்பாக இளைய சமூகத்தை வழிப்படுத்த முடியும்.

என்னிடம் நூறு இளைஞர்களைத் தாருங்கள் அவர்கள் எதுவாக வேண்டுமோ அதுவாக நான் அவர்களை உருவாக்கித் தருகிறேன் என்றார் சுவாமி விவேகானந்தர்.

சுவாமிகளின் கூளுரை ஆத்மீக பலத்துடன் சார்ந்தது. வீர இளைஞர்களே! என்ற அவரின் விழிப்பு ஆன்மீக உணர்வுடன் கூடியது.

ஆக, பெற்றோர்களே! எங்கள் பிள்ளைகள் உயர்ந்த வாழ்வை வாழ, நெறிதவறா நல்வழியில் செல்ல அவர்களை ஒழுங்கு படுத்துங்கள்.

இறைவழிபாடு, தியானம், ஆன்மீக உணர்வு என்பவையே இந்த பாவ உலகில் இருந்து எம் இளம் சமூகத்தைப் பாதுகாக்கும்.

எனவே எழுச்சியோடு நல்லை ஆதீனத்தில் ஆரம்பிக்கப்படும் வெள்ளிக்கிழமை ஆன்மீக வழி காட்டல் நிகழ்வில் மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொள்வோம்.

இதற்காக தனியார் கல்வி நிறுவனங்கள் வெள்ளிக்கிழமை பிற்பகல் வகுப்புகளை நிறுத்தி எங்கள் மாணவச் செல்வங்கள் ஆன்மீகச் செழுமை பெற உதவ முன்வரவேண்டும்.

வெறுமனே! பொருளாதாரத்தேடல் மட்டும் மன நிறைவான வாழ்வுக்கு வழிதராதென்ற தத்துவத்தை உணர்ந்து செயற்படுவோம்.

# ஊடகவியலாளர்களுக்கு வீட்டுத்திட்டம் வரிவிலக்குடன் வாகன கொள்வனவு வசதி

## தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி அறிவிப்பு

ஊடகவியலாளர்களுக்கு கொழும்புக்கு அண்டிய பிரதேசத்தில் புதிய வீடமைப்புத் திட்டமொன்றை ஆரம்பிக்கவும், 15 வருடம் அனுபவமுள்ள ஊடகவியலாளர்களுக்கு வரிவிலக்குடன் வாகனம் ஒன்றை கொள்வனவு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதியளித்துள்ளார்.

இந்த வருடம் முதல் ஊடகவியலாளர்களுக்கு என ஓய்வூதிய முறையொன்றை நடைமுறைப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, விமர்சனங்கள் அல்லது அவ் ஊடக நிறுவனங்களின் நடைமுறைகள் தொடர்பாக கடந்த கால அரசாங்கங்களைப் போல் எந்தவொரு கட்டுப்பாட்டு விதிகளையும் அமுல்படுத்த வில்லை.

வெறுமனே அரசியல் முரண்பாடுகளுக்காக ஊடகங்களை பாவிப்பதை விடுத்து, நாட்டின் புகழ், அபிவிருத்தி மற்றும் தேசியம், சமூகத்தார்மீகத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் என்பவற்றை கணக்கில் கொண்டு சுயகட்டுப்பாட்டுடன் அவை செயற்படவேண்டும் என்பதே எனது நம்பிக்கையாகும்.

நாட்டின் அபிவிருத்திச் செயற்பாட்டின் போது ஊடகவியலாளர்களின் கருத்துக்கள், முன்மொழிவுகள் உட்பட உள்நாட்டு வெளிநாட்டு அபிவிருத்தித் தகவல்கள் மற்றும் அறிவுசார் விடயங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான வழிமுறைகளை உருவாக்கி கொள்வதற்கு அவசியப்படும் வசதிகளை அரச அனுசரணையுடன் பெற்றுக்கொடுப்பேன்.

ஊடகவியலாளர்களின் அறிவு மற்றும் தொழில்நுட்பத் திறன் என்பவற்றை விருத்தி செய்வதற்காக, தேசிய ஊடகத்துறை உயர்கல்வி நிறுவனமொன்றை ஆரம்பிப்பேன்.

ஊடகவியலாளர்களுக்கு சர்வதேச அறிவையும் அனுபவத்தையும் பெற்றுக் கொள்வற்காக ஜனாதிபத நிதியத்தின் கீழ் விசேட புலமைப்பரிசில் முறையொன்றை அறிமுகப்படுத்துவேன்.

உழைக்கும் பத்திரிகையாளர்களுக்குத் தேவைப்படுகின்ற கமெரா, கணனி மற்றும் போக்குவரத்து வசதிக்காக மோட்டார் சைக்கிளைப் பெற்றுக் கொள்வதற்கு வரிவிலக்கு வசதியைக் செய்துகொடுப்பேன். அத்துடன் 15 வருடத்திற்குக் குறையாது உழைக்கும் பத்திரிகையாளர்களாகப் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்களுக்கு விரிவிலக்குடன் கூடிய வாகனம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பேன்.

ஊடகவியலாளர்களுக்காக கொழும்பை அண்டிய பிரதேசத்தில் புதிய வீடமைப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பிப்பேன்.

ஊடகவியலாளர்களுக்கான ஓய்வூதிய முறையை இவ்வருடத்திலிருந்து நடைமுறைப்படுத்துவேன் என்றுள்ளது. (ச)

# யுத்தத்தின் போது 140 பல்கலைக்கழக மாணவர்கள் காணாமல் போயுள்ளனர்

## அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

(கொழும்பு)

அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தின் போது 140 பல்கலைக்கழக மாணவர்கள் காணாமல் போனதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் அவர்களின் விபரங்களை மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் வெளியிட வேண்டும் என அந்த ஒன்றியத்தின் தலைவர் உதுல் பிரேமரட்ன கோரியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய அவர் குறித்த மாணவர்கள் உயிரிழக்கவில்லை என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன. அவர்கள் வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு முகாம்களில் தங்கியிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் படையினரால் விடுவிக்கப்பட்டமைக்கான சான்றுகள் எவையும் இல்லை என்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் தமிழர்களை சிறைப்படுத்தும் நடவடிக்கைகள் தொடர்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கடந்த வருடத்திற்குள் 60 பல்கலைக்கழக மாணவர்கள் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

## அரச பணத்தைப் பயன்படுத்தி பொங்கல் விழா நடத்தக் கூடாது

### -தேர்தல் ஆணையாளர்-

(கொழும்பு)

அரசாங்கப் பணத்தைப் பயன்படுத்தி பொங்கல் விழா நடத்தக் கூடாது என தேர்தல் ஆணையாளர் சுற்றுலாத்துறை அமைச்சுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

நாளை வியாழக்கிழமை வவுனியாவில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தைப்பொங்கல் விழா தேர்தல் சட்டங்களுக்கு புறம்பான வகையில் அமையப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் பொங்கல் விழாவை நடத்துமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் அசல ஜாகொட தமது அமைச்சின் செயலாளருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

தைப்பொங்கல் விழாவிற்காக 15 மில்லியன் ரூபாவினை ஒதுக்குமாறு செயலாளருக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

தென் இந்திய கலைஞர்களைக் கொண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கையாகவே இந்த தைப்பொங்கல் விழா நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் இந்த தைப்பொங்கல் விழா தேர்தல் பிரச்சாரத்தை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படவில்லை என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## ஊடக அடக்குமுறைக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை, காணாமல் போனமை, தாக்கப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்களுக்குத் தீவைத்தமை ஆகிய சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்து தண்டனை வழங்குமாறு அழுத்தம் கொடுத்து ஊடக அமைப்புக்களின் கூட்டமைப்பு கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்று மதியம் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டது.

பொய் வேண்டாம், லசந்த கொலையின் கொலைகாரர்களைத் தண்டி, என்ற தொனிப் பொருளில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன்போது ஊடகவியலாளர்களின் ஊடக சுதந்திரத்தையும், கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்யுமாறு கோரி கோஷங்களை எழுப்பினர்.

ராஜபக்ஷ என்றாலும் , பொன்சேகா என்றாலும் தமக்கு வேண்டியது எழுதும் சுதந்திரம் எனவும் ஊடகவியலாளர்கள் கோஷமிட்டனர். இதன்போது உண்மையைக் கூறுங்கள் என அச்சிடப்பட்ட கறுப்புத் துணிகளை முகத்தில் கட்டியவாறு ஊடகவியலாளர்கள் சுமார் ஒரு மணிநேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ச-5)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### கல்வியும் சமுதாயமும்



பழைய இனங்கள் எல்லாம் பொன்னாசை, அதிகாரவெறி ஆகியவற்றின் விளைவாக கொடுமை, துன்பம் முதலியவற்றின் சுமை தாங்க முடியாமல் அழிந்தே போயிருக்கின்றன.புதிய இனங்களோ அதே சுமைகளால் தள்ளாடி விழும் நிலையில் இருக்கின்றன.

இந்த நிலையில் வெற்றி பெறப்போவது அமைதியா?,போரா?, பொறுமையா?, பொறுமையின்மையா?,நன்மையா?, தீமையா?, தோள் வலிமையா?, அறிவு வலிமையா?, இலௌகிகமா?, ஆன்மீகமா?வாழ்க்கைப் போராட்டத்தில் தப்பிப் பிழைக்கப்போவது எது என்ற கேள்விக்குப் புதிய இனங்கள் இனிமேல் தான் பதிலைத் தீர்மானிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றன.

ஆனால் நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே நாம் நம்முடைய பிரச்சினையைத் தீர்த்திருக்கிறோம்.தீராத இந்தப் பிரச்சினைக்கு நாம் அளித்த விடை , உலக ஆசை இல்லாமல் இருத்தல்.அதாவது தியாகம் என்பது தான்.



யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு கல்வி அமைச்சின் செயலாளர் வருகை தந்தபோது இடம்பெற்ற கலாசார வைபவமொன்றில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆலோசனைச் சபை உறுப்பினர் லயன் டாக்டர் வை. தியாகராசா, அமைச்சின் செயலாளர் நிமால் பண்டாரவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் அருகில் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# அதிகரித்துச் செல்லும் சீனியின் விலையேற்றம்

சந்தையில் சீனியின் விலை அதிகரித்துச் செல்வதாக வர்த்தகர்களும் நுகர்வோரும் தெரிவிக்கின்றனர். 3 வாரங் களுக்கு முன்னர் 85 ரூபாவாக இருந்த 1 கிலோ சீனியின் விலை தற்போது 105 ரூபாவாக விற்கப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

இதன் காரணமாக தாங்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக அவர் சுட்டிக்காட்டுகின்றனர். சீனி ஒவ்வொரு விலையிலும் அமைந்துள்ளதாகவும் கடந்த நாட்களில் 85 ரூபாவாக இருந்த சீனியின் விலை தற்போது 100 ரூபா, 105 ரூபா என பல்வேறு விலைகளில் விற்கப்படுவதாகவும் கடைக்கு கடை விலை மாறுபடுவதாகவும் நுகர்வோர் தெரிவிக்கின்றனர். எனவே அரசாங்கம் தலையிட்டு சீனியின் விலையை கட்டுப்படுத்தவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போது ஒரு கிலோ கிராம் சீனியின் மொத்த விலை 90 ரூபா முதல் 95 ரூபா வரையாக அமைந்துள்ளதென அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் மொத்த வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இறக்குமதிக்காக கோரப்பட்டிருக்கும் சீனியை எதிர்காலத்தில் இதனைவிட அதிக விலைக்கு சந்தைப்படுத்த வேண்டிவருமென அவர் சுட்டிக்காட்டினார். உலக சந்தையில் சீனியின் விலை அதிகரித்துள்ளதால் இந்த நிலை தோன்றியுள்ளதாக அவர் மேலும் கூறினார். இது தொடர்பாக வர்த்தக மற்றும் நுகர் வோர் விவகார அமைச்சர் பந்துலகுணவர்த்தன கருத்து தெரிவிக்கையில்,

சீனி விலையை குறைப்பதற்கு அரசாங்கம் அதிகபட்ச நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் உலக சந்தையில் விலை அதிகரித்துள்ளதால் அதனை கட்டுப்படுத்த முடியாதுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.(2-4)

# தனித் தெலுங்கானா மாநிலம் விரைவாக ஏற்படுத்தப்படவேண்டும்

## தொடரும் போராட்டம்

(புதுடெல்லி)

ஆந்திராவில் இருந்து பத்து மாவட்டங்களைப் பிரித்து தனி தெலுங்கானா மாநிலம் உருவாக்கப் போராட்டம் நடந்து வருகிறது. ஐதராபாத் நகரை தலைமை இடமாகக் கொண்டு தெலுங்கானா மாநிலம் ஏற்படுத்தப்படவேண்டும் என்பதில் தெலுங்கானா பகுதி மாணவர்களும் தீவிரமாகவுள்ளனர்.

அவர்களும் தனி அமைப்பு ஏற்படுத்திப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இதையடுத்து மத்திய உள்துறை மந்திரி ப. சிதம்பரம் ஆந்திரா தலைவர்களை டெல்லிக்கு அழைத்துப் பேச்சு நடத்தினார்.

அதில் எந்தவித உடன்பாடும் ஏற்படவில்லை. கடலோர ஆந்திரா, ராயலசீமா பகுதிகளைச் சேர்ந்த 13 மாவட்டத் தலைவர்கள் ஐக்கிய ஆந்திரா நீடிக்கவேண்டும் என்று வற்புறுத்துவதால் சிக்கல் நீடிக்கிறது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தெலுங்கானாப் பகுதி தலைவர்கள் மத்திய அரசுக்கு மீண்டும் மிரட்டல் விடுக்கத் தொடங்கியுள்ளனர்.

இதற்காக தெலுங்கானா தொடர்பான அறிவிப்பை வெளியிடாவிட்டால் போராட்டத்தைப் பெரியளவில் நடத்தப்போவதாக எச்சரித்துள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக பிரதமர் மன்மோகன்சிங்கை நேற்று முன்தினம் தெலுங்கானா ராஷ்டீரிய சமிதி கட்சித் தலைவர் சந்திர சேகரராவ் சந்தித்துப் பேசினார்.

தனித் தெலுங்கானா மாநிலத்தை விரைவில் ஏற்படுத்தவேண்டும் என்று அவர் பிரதமரிடம் வலியுறுத்தினார். ஆனால் இது தொடர்பாக அவர் நிருபர்களிடம் எந்தக் கருத்தும் சொல்ல மறுத்துவிட்டார். என்றாலும் தெலுங்கானா தொடர்பாக மத்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் சந்திரசேகரராவுக்கு திருப்தி கொடுத்துள்ளதாகத் தெரிகிறது.

இதேவேளை ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா மாநிலத்தை உருவாக்க மத்திய அரசு தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. ஆந்திரா - தெலுங்கானா தலைவர்கள் இரு அணிகளாகவே பிரிந்துவிட்டதால் இனி அதை ஒட்டவைக்க இயலாது என்று மத்திய அரசு தெலுங்கானாவுக்கு சம்மதம் தெரிவித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இது பற்றி அதிகாரப்பூர்வமாக அறிவிப்பதற்கு முன்பு ஆந்திரா தலைவர்களிடம் சமரசம் செய்யும் முயற்சிகளில் ஈடுபட காங்கிரஸ் மேலிடம் தீர்மானித்துள்ளது. ஆந்திரா வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் கவனம் செலுத்தும் என்ற உறுதிமொழியுடன் சமரசப் பேச்சை மத்திய அரசு நடத்தி வருகிறது.

தெலுங்கானாவுக்கு ஆதரவாக மத்திய அரசு மாறியுள்ளதால் கடலோர ஆந்திரா தலைவர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மத்திய அரசின் சமரசத்தை அவர்கள் ஏற்பார்கள் என்று தெரியவில்லை. (2-6)

# ஓசியானிக் வைக்கிங் கப்பல் அகதிகள் நால்வரை ஏற்றுக்கொள்ள அவுஸ். மறுப்பு

இந்தோனேசியாவில் தரித்திருந்த ஓஷியானிக் வைக்கிங் கப்பலில் இருந்து தரையிறங்கி தற்போது முகாம்களில் உள்ளவர்களில் நான்கு இலங்கையர்களுக்கு அவுஸ்திரேலியாவில் மீளகுடியேறுவதற்கான விசா அனுமதிப்பத்திரம் மறுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவுஸ்திரேலிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதியளித்த வகையில் கப்பலில் தங்கியிருந்த 78 இலங்கையர்கள் வெளியேறி இந்தோனேஷிய தடுப்பு முகாம்களில் இருந்து வருகின்றனர்.

இவர்களில் சிலர் அவுஸ்திரேலிய மற்றும் கனடா நாடுகளில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

இந்த நிலையில் சந்தேகத்தின் பேரில் அவர்களுள் நான்கு பேருக்கு அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் தங்குவதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அவர்களையும் முகாம்களில் எஞ்சியிருப்பவர்களையும் மீள்குடியேற்றுவதற்கு ஒரு நாட்டைத் தெரிவு செய்வது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக அவுஸ்திரேலிய குடிவரவு குடியகல்வுத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (2-6)

# திருக்கேதீஸ்வர ஆலயப்பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது

(கொழும்பு)

வடமாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக வரலாற்று சிறப்புமிக்க திருக்கேதீஸ்வர ஆலயத்தையும் அதனைச் சூழவுள்ள பிரதேசங் களையும் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் முதற்கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 13ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சிவராத்திரி தினத்திற்கு முன்பாக மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தச் செயற்றிட்டத்திற்காக 27 கோடி ரூபா நிதி அவசியம் என மதிப்பிடப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதேவேளை முதல்கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதிகள் மற்றும் பாலாவி தீர்த்தக்குளம் ஆகியன புனரமைக்கப்படவுள்ளன என்றும் இது தவிர நீர்ப்பாசன வசதிகளை உரியவகையில் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இரண்டாவது கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின்போது ஆலயத்தின் உள்ளக வீதிகள் , அறநெறி பாடசாலைக்கான கட்டடங்கள், கலாசார மண்டபம், ஓய்வறை மற்றும் தியான நிலையம் என்பன புனரமைக்கப்படவுள்ளன என்றும் அத்துடன் வீதி விளக்குகள் புதிதாகப் பொருத்தப்படவுள்ள அதேவேளை தெப்பைக்குளம் ஒன்றும் நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயிரத்து 400 வருடங்கள் பழைமையான திருக்கேதீஸ்வரம் சிவன் ஆலயத்தின் பாலாவி தீர்த்தத்தை பக்தர்கள் புனித தீர்த்தமாக போற்றுவது வழக்கம். (2-6)

# அஸ்திரா ஏவுகணைச் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது

(பலாசூர்)

ஒரிசா மாநிலம் பலாசூரில் உள்ள இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் இராணுவத்துக்குத் தேவையான ஏவுகணைகள் தயாரித்து சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

நேற்று முன்தினம் காலை 9.45 மணிக்கு மண்ணில் இருந்து விண்ணில் செலுத்தி எதிரியின் இலக்கை துல்லியமாகத் தாக்கி அழிக்கக் கூடிய அஸ்திரா ஏவுகணை சோதனையை இந்த மையத்தின் விஞ்ஞானிகள் வெற்றிகரமாக நடத்தினார்கள்.

முற்றிலும் உள்நாட்டு தொழில் நுட்பத்துடன் தயாரான இந்த ஏவுகணை மணிக்கு ஆயிரத்து 600 கிலோ மீற்றருக்கும் மேலான வேகத்தில் வரும் சூப்பர்சானிக் விமானத்தைக் கூடத் தாக்கி அழிக்கவல்லது. அஸ்திரா எவ்வளவு தூரத்திற்குச் சென்று இலக்கைத் தாக்கும் என்பது குறித்து விஞ்ஞானிகள் எதுவும் தெரிவிக்கவில்லை.

எனினும் கடல் மட்ட உயரத்துக்கும் 30 ஆயிரம் அடி மற்றும் 15 கி.மீ. உயரம் வரையும் 30 கி. மீ. முதல் 110 கி. மீ. வரையிலான இலக்கைத் தாக்கும் வகையில் மூன்று விதங்களில் அஸ்திரா ஏவுகணை உருவாக்கப்பட்டுள்ளது. (2-6)

# குண்டாக இருப்பதால் பதவி பறிப்பு விமான பணிப்பெண்கள் வழக்கு

(புதுடெல்லி)

விமானத்தில் பணிப்பெண்களாக இருப்பவர்களுக்குச் சில கட்டுப்பாடுகள் உள்ளன. அதில் குறிப்பிட்ட எடைக்கு மேல் இருக்கக் கூடாது என்பதும் ஒன்று.


இந்திய தேசிய விமான நிறுவனத்தில் பணியாற்றிய பத்துப் பணிப்பெண்கள் உடல் எடை அதிகரித்து குண்டாக இருந்தனர். அவர்களை விமான நிறுவனம் பணி நீக்கம் செய்தது.

இதை எதிர்த்து பணிப்பெண்கள் டெல்லி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். அவர்கள் சார்பில் பணிப்பெண் சல்லீரா சார்ப் வழக்கு மனுவைத் தாக்கல் செய்து இருந்தார். அதில் எங்களிடம் உரிய விளக்கங்கள் கேட்காமலேயே பணி நீக்கம் செய்துவிட்டனர். இது சட்டவிரோதமானது. அடிப்படை உரிமைகளைப் பறிக்கக் கூடியது என்று கூறியிருந்தார்.


நீதிபதி அகர்பால் முன்பு விசாரணைக்கு வந்தது. பணிப்பெண்கள் சார்பில் சட்டத்தரணி அரவிந்த்குமார் முன்னிலை ஆனார்.

இது தொடர்பாக விமான நிறுவனம் 22ஆம் திகதி விளக்கம் அளிக்க வேண்டும் என்று நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

விமான நிறுவன விதிகளின்படி விமான பணிப்பெண்களாக 18 வயதில் சேரலாம். அப்போது அவர்கள் 152 சென்டி மீற்றர் உயரம் இருக்க வேண்டும். 26 வயதில் இருந்து 30 வயது வரை உள்ளவர்கள் 50 கிலோ வரை இருக்கலாம். அதற்கு மேல் வரை உள்ளவர்கள் 56 கிலோ வரை இருக்கலாம். இதற்கு மேலும் அதிகரித்தால் வேலையைத் தொடர முடியாது. (2-6)







வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களை மீளக்குடியமர்த்தல் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி உட்பட்ட குழுவினர் ஆராய்வதையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்கு நடந்து சென்று மீள்குடியேற்றத்திற்கான ஆரம்ப பூஜையில் ஈடுபட்டிருப்பதையும் அதன் பின்னர் வலி வடக்கு மக்கள் மத்தியில் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-றம்சன்)

# இலங்கை மீதான விசாரணைக்கு கோருபவர்கள் அனைவரும் விடுதலைப்புலி ஆதரவாளர்களல்ல

## அமெரிக்கா சுட்டிக்காட்டு

(வாஷிங்டன்)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என புலம் பெயர் தமிழ் மக்களும் மனித உரிமை அமைப்புக்களும் வலியுறுத்தி வருகின்றன.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அக்கறை செலுத்தும் எல்லா அமைப்புகளையும் விடுதலைப் புலிகளுக்குச் சார்பானவை என நாம் கூற முடியாது என இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் 'பற்றீசியா பூற்றினஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் த சண்டே ரைம்ஸ் வார ஏட்டுக்கு அவர் வழங்கிய நேர்காணல் வருமாறு,

***கேள்வி:-*** அண்மைய மாதங்களாக அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளதாகப் பலரும் நம்புகின்றனர். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?

***பதில்:-*** அமெரிக்கா இலங்கையின் நீண்ட கால நண்பன். இரு தரப்புக்குமிடையில் சில கருத்து வேறுபாடுகளும் பதற்றமும் இருப்பது உண்மைதான். ஆனால் அது வழமையானது.

எனினும் இடம்பெயர்ந்த மக்கள் விடுவிக்கப்பட்டதை நாம் அனுகூலமான நடவடிக்கையாகவே பார்க்கின்றோம். மீள்குடியேற்றம், மக்களின் சுதந்திர நடமாட்டம் போன்றவையும் அத்தகையதே.

எதிர்வரும் தேர்தல் தொடர்பாக நாம் அக்கறை கொண்டுள்ளோம். அமெரிக்கா எந்த வேட்பாளரையும் ஆதரிக்கவில்லை. ஆனால் சுயாதீனமானதும் நீதியானதுமான வன்முறைகளற்ற தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே எமது விருப்பம்.

***கேள்வி:-*** தேர்தல் தொடர்பாக நீங்கள் அக்கறை கொள்வதற்கு ஏதாவது குறிப்பிட்ட காரணம் உண்டா?

***பதில்:-*** பொதுவாக சில சம்பவங்களை நாம் கேள்வியுற்றோம். உருவப்படங்களை அகற்றுமாறு தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டிருந்தார். சில உருவப்படங்கள் அகற்றப்பட்டுள்ளன. பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

அழுத்தங்களோ, வன்முறைகளோ அற்ற நிலையில் மக்கள் தமது விருப்பப்படி வாக்களிக்கும் சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும். இதுதான் எமது அக்கறைக்கான சில காரணங்கள்.

***கேள்வி:-*** போர்க் குற்றச்சாட்டுக்களை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வருவதாகக் கருதப்படுகின்றது. இறுதிக் கட்டச் சமரின்போது நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் திணைக்களம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. போர்க் குற்றம் தொடர்பில் அமெரிக்கா எவ்வளவு தூரம் முக்கியத்துவம் கொடுக்கின்றது?

***பதில்:-*** இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்களை நாம் முக்கிய பிரச்சினையாகக் கருதுகின்றோம். அனைத்துலக மனித உரிமை விதிகளுக்கு அமைவாகவே இலங்கையின் ஜனநாயக வழிமுறைகள் உள்ளன.

எனவே அதில் இலங்கை மக்களுக்கு மட்டுமன்றி அனைத்துலக சமூகத்திற்கும் அக்கறைகள் உண்டு. இலங்கையில் மோசமடைந்துள்ள மனித உரிமைகள் செயற்பாடுகள் அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமான படைத்துறை ஒத்துழைப்புக்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன.

எனவே மனித உரிமை மீறல்கள் தொடர்பான நடவடிக்கைகளையும் விசாரணைகளையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்பதை நாம் தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம். தமக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை கூறுவதற்கு மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

***கேள்வி:-*** படைத்துறை ஒத்துழைப்புக்களில் தற்போதைய நிலை என்ன?

***பதில்:-*** இரு நாடுகளுக்குமிடையில் நீண்ட காலமாகப் படைத்துறை ஒத்துழைப்புக்கள் உள்ளன. எனினும் மனித உரிமை மீறல்கள் மோசமடைந்துள்ளதைத் தொடர்ந்து 2008 ஆம் ஆண்டில் இருந்து சில படைத்துறைப் பயிற்சி நடவடிக்கைகளை நாம் இலங்கைக்கு வழங்குவதை நிறுத்தியிருந்தோம்.

எனினும் மீண்டும் பழைய உறவுகளை ஏற்படுத்துவதற்கு முயன்று வருகின்றோம். முழுமையான பயிற்சிகளை வழங்க நாம் விரும்புகின்றோம். வாஷிங்டனின் வெளிவிவகாரக் கொள்கை பகிரங்கமானது.

அதில் பல தரப்பினரதும் பங்களிப்புகள் உண்டு. உதாரணமாக இலங்கைக்குச் சார்பான வெளிவிவகாரக் கொள்கையை ஒபாமா அரசு பின்பற்ற வேண்டும் என காங்கிரஸ் சபையின் வெளிவிவகாரக் குழு பரிந்துரை செய்திருந்தது.

அது இலங்கைக்குச் சாதகமானது. எனினும் அதேசமயம் இலங்கைக்கான படைத்துறை உதவிகள் தொடர்பில் காங்கிரஸின் உறுப்பினர்கள் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளனர்.

அரசியலில் பலதரப்பட்டவர்கள் கொள்கையை வகுப்பதுண்டு. எனவே இலங்கையுடன் முழுமையான படைத்துறை ஒத்துழைப்புக்களை நாம் மேற்கொள்ள முடியாது.

***கேள்வி:-*** தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும் என்பதையும் அமெரிக்கா வலியுறுத்தி வருகின்றது. ஆனால் அரசியல் தீர்வு எட்டப்பட்டதற்கான எந்த அறிகுறியையும் காண முடியவில்லை. எனவே அமெரிக்கா தற்போதும் அதனை வலியுறுத்துகின்றதா?

***பதில்:-*** தமிழ் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யப்படுவதன் மூலம் அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்வு அமையும் என்பதை இலங்கையிலுள்ள பல மக்களைப் போல நாமும் நம்புகின்றோம்.

அது 13-வது திருத்தச் சட்டம், 17-வது திருத்தச் சட்டம் அல்லது தேர்தல் அல்லது வேறு ஏதாவது நடவடிக்கைகள் மூலமாக எட்டப்படலாம். ஆனால் அரசியல் தீர்வு பின் தள்ளப்படுவது நாட்டைக் கட்டியெழுப்பும் காலத்தைப் பின்தள்ளுவதாகவே அமையும்.

***கேள்வி:-*** எதிர்வரும் 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. ஆனால் இடம்பெயர்ந்த மக்களில் பலர் தற்போது வரை பதிவு செய்யப்படவில்லை. தேர்தல் தொடர்பில் பலர் அக்கறையற்றும் உள்ளனர். இது தொடர்பில் அமெரிக்கா என்ன கருதுகின்றது?

***பதில்:-*** தேர்தல் சுயாதீனமாகவும் நேர்மையானதாகவும் வன்முறைகளற்றும் நடைபெற வேண்டும் என்பதே எமது விருப்பம். இடம்பெயர்ந்த மக்கள் தம்மை பதிவு செய்வதற்கும் வாக்களிப்பதற்கும் அதிக உதவிகள் வழங்கப்பட வேண்டும்.

இடம்பெயர்ந்த மக்களை பதிவு செய்வதற்குத் தமது அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருவதாகத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மிகவும் சிக்கலான நிலைமையில் கடினமான பணியை மேற்கொண்டு வருகின்றார். உங்களின் கருத்துப்படி இடம்பெயர்ந்த மக்கள் தம்மைப் பதிவு செய்து கொண்டது மிகவும் குறைவாக இருந்தால் அது கவலை தருகின்றது.

அவர்களுக்கு தாம் தமது பழைய வாழ்க்கையை மீளப்பெறுவதுதான் தற்போதைய நிலையில் தேர்தலை விட முக்கியமானதாக இருக்கலாம். (ச-5)

# உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள...

இது தொடர்பில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள கைதிகள் தமது கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஒன்றை ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர். அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பத்திரிகை ஊடாக, ஊடகங்கள் ஊடாக கொடுக்கப்படுகின்ற வாக்குறுதிகளை நம்பி, மற்றும் சட்டமா அதிபர் கூறிய வாக்குறுதிகளை நம்பியோ நாம் உண்ணாவிரதத்தை கைவிடுவதில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நேற்றுடன் 8ஆவது நாளாக சாகும்வரையான உண்ணாவிரத போராட்டம் தொடர்கிறது.

மேலும் அமைச்சர் மலிந்த மொறகொட சிறைச்சாலைக்கு நேரில் வந்து எமது வாக்குறுதிகளை நிறைவேற்றும் வரை இலங்கையில் உள்ள அனைத்து சிறைகளில் இருக்கும் அரசியல் கைதிகளின் போராட்டம் தொடரும். தற்போது கைதிகளின் நிலை மிக மோசமாக இருப்பதோடு பல கைதிகள் ஏற்கனவே வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நாளுக்கு நாள் பலர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படுகின்றனர்.

எனவே துயரம் நிறைந்த சம்பவங்களைக் கருத்தில் கொண்டு நாடளாவிய ரீதியில் இருக்கின்ற அனைத்து அதிகாரமுள்ள அரசியல் தலைவர்களும் புத்திஜீவிகளும் மனித நேயம் உள்ள அமைப்புக்களும் துரிதமாக கவனம் எடுத்து கைதிகளின் கோரிக்கைகளை உடன் நிறைவேற்ற சம்பந்தப்பட்ட வர்களோடு தொடர்புகொண்டு ஆவன செய்யுமாறு வேண்டி நிற்கின்றனர் என்றுள்ளது.

இதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் பலர் தொடர்ச்சியாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளதாக சிறைச் சாலைகள் திணைக்களம் தெரிவிக்கிறது.

வெலிக்கடை புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள 96 பேரும் மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 6 பேரும், யாழ்ப்பாணம்-24, அநுராதபுரம்-14 கைதிகளும் உண்ணாவிரதத்தில் இணைந்துள்ளதாக சிறைச் சாலை திணைக்களத்தின் ஊடக பேச்சாளர் சனத் பெர்ணான்டோ தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்தின் கோரிக்கைகளுக்கு அமைய நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு சென்றிருந்த தாம் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட குழுவினருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக அவர் குறிப்பிட்டார். அவர்களில் 21 பேருக்கு மட்டும் தற்போது சட்ட ரீதியாக மேல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம்பெற்று வருவது அங்கு தெரியவந்ததாக அவர் கூறினார்.

இது தொடர்பாக சிறைச்சாலை ஊடகப்பேச்சாளரினால் சிறைச் சாலை ஆணையாளர் நாயகத்திற்கு இன்று அறிக்கை ஒன்று கையளிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார். (ச-3)

## ஜெனரல் சரத் பொன்சேகா...

நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர் பயணம் செய்து கொண்டிருந்த பஸ் மீது தாக்குதல் நடத்தியதாக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கான காரணம் என்ன என்பது குறித்து இதுவரையில் அறிவிக்கப்படவில்லை.

வத்தூரந்தெனிய பிம்படுபய என்ற இடத்தைச் சேர்ந்த குசுமாவதி குருபாராச்சி என்ற 58 வயது பெண்ணே இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளார். உயிரிழந்த பெண் 5 பிள்ளைகளின் தாயார் என்பது குறிப்பிடத் தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொள்ளச்சென்றபோது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நபர்கள் பஸ் மீதும் பயணிகள் மீதும் தாக்குதல் நடத்தியதாக தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

திஸ்ஸமஹாராமவில் சஜித் பிரேமதாஸா வினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்ள சென்ற ஆதரவாளர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (ச-3,5)

## அதிகாரப் பகிர்வுடனான...

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பில் புதிய சட்டங்கள் உருவாக்கப் படவேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தின் முடிவு இனப்பிரச்சினையின் முடிவாகக் கருதப்பட முடியாது. தமிழர் அபிலாஷைகள் தொடர்பில் அரசியல் ரீதியாக அணுகப்பட வேண்டியது இன்றியமையாதது. தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதற்கு அரசியல் சாசனத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியதுடன் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றையும் நடத்த வேண்டியுள்ளது.

சாதாரண பொதுமக்கள் அமைதியான வாழ்க்கையை மட்டுமே விரும்பி நிற்கின்றனர்.

எனினும் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுத் திட்டம் வழங்க வேண்டியது இன்றியமையாதது தென அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## வன்னிமக்...

நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிவசக்தி ஆனந்தனும் உறுதிப்படுத்தியுள்ளார். இது தொடர்பாக பலர் முறைப்பாடு செய்திருக்கிறார்கள். தங்களுடைய வீட்டிலிருக்கக்கூடிய கதவு, யன்னல், மரம் இப்படியான பொருட்கள் களவாடப்படுகிறது. முக்கியமாக வாகனங்களுடைய உதிரிப்பாகங்கள் களவாடப்படுகிறது என்றனர் என அவர் தெரிவித்தார். (ச-5)

## வன்னி மக்களின் பொருட...

குறித்த விபரங்களை அப்பகுதி அரசாங்க அதிபரிடம் நாங்கள் கொடுத்துள்ளோம்.

எந்த பொருட்கள் யாருடையவை எனக் கண்டு பிடித்து உரியவர்களிடம் கையளிக்க வகை செய்யும் முகமாகவே அரச அதிபரிடம் இந்தப் பட்டியல் கையளிக்கப்பட்டுள்ளது.

இது தவிர பாழடைந்த, பழுதடைந்த வாகனங்கள் பிறிதாக வைக்கப்பட்டுள்ளன. நிலக்கண்ணி வெடிகள் அகற்றி முடிந்ததும் மக்கள் அங்கு குடியேறும் போது அவர்கள் தங்கள் பொருட்களை உரிமை கோருவார்.

போரின் போது பல பொருட்கள் சேதமடைந்தன. புலிகளாலும் பல அழிக்கப்பட்டுள்ளன. எனவே அங்குள்ள பொருட்களை எடுக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. எமக்கு தேவையான வாகனங்கள்,, உபகரணங்கள் எம்மிடமே இருக்கின்றன. எம்மீது குறிப்பிடப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை. அதை நான் முழுமையாக நிராகரிக்கிறேன் என்றார். (ச-14)

## தமிழ்த் தேசியக்...

ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு தாம் ஆதரவு வழங்கத் தீர்மானித்திருப்பது குறித்து விளக்கவுள்ளதாக கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)

## திஸ்ஸநாயகம்...

தினால் அனுமதிக்கப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து அவருக்காக பிணைக்கட்டணமாக செலுத்த வேண்டிய 50 ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்ட நிலையில் அவர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்படவில்லை. அதனைத் தொடர்ந்து அவர் நேற்று நண்பகல் 12 மணியளவில் விடுதலை செய்யப்படுவாரென எதிர்பார்க்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அவர் விடுதலை செய்யப்படுவதை செய்தியாக்கும் நோக்கில் சிறைச்சாலை முன்பாக இன்று பகல் 12 மணியளவில் ஊடகவியலாளர்கள் பலர் கூடியிருந்த போதும் அவர் நேற்று விடுதலை செய்யப்படவில்லை.

நீதிமன்றத்தில் பிணைப்பணம் செலுத்தி அதனை உறுதிப்படுத்தி சிறைச்சாலைக்கு செலுத்தும் ஆவணம் சிறைச்சாலை அதிகாரிகளின் கைகளில் கிடைக்காமையினால் அவர் விடுதலை செய்யப்படவில்லை என சிறைச்சாலை அதிகாரியொருவர் குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து அவர் இன்று விடுதலை செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-5)

## ஐ.நா. விசேட பிரதிநிதி...

யானவை என பிலிப் அல்ஸ்டன் அண்மையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டிருந்தார்.

பிலிப் அல்ஸ்டனின் அறிக்கையையும் இலங்கை அரசாங்கத்தின் அறிக்கையும் தாம் பார்வையிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானிக்கும்.

பிலிப் அல்ஸ்டனின் கருத்துக்கள் அவரது சொந்த சுயாதீன கருத்துக்களாகவே கருதப்பட வேண்டும். இலங்கையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுதல், அரசியல் தீர்வுத்திட்டம் முன்வைத்தல், குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி தண்டனை வழங்குதல் என பல விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் ஐக்கிய நாடு கள் சபை தொடர்ச்சியாக கவனம் செலுத்தி வருகிறது என அவர் குறிப்பிட்டார். (ச-5)

# மரண அறிவித்தல்

திருமதி

## பொன்னுத்துரை சின்னத்தங்கச்சி



உரும்பிராய் கிழக்கு மடத்தடியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சின்னத்தங்கச்சி கடந்த ஞாயிற்றுக் கிழமை *(10.01.2010)* காலை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், மகாலிங்கம், வசந்தாதேவி, அற்புதலிங்கம் (பாண்டி), சந்திரலிங்கம் (ஜேர்மன்), செல்வலிங்கம் (லண்டன்), வதனா, ஜெயலலிதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு அன்புத் தாயாரும், தங்கப்பிரகாசம், வசந்தநிதி, புஸ்பமலர், சந்திரராணி, கேமவதி, மனோகரன், ரவீந்திரநாதன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (புதன் கிழமை-13. 01.2010) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக எருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி,
உரும்பிராய் கிழக்கு (மடத்தடி).

தகவல்
குடும்பத்தினர்.

(346)


**LAVA HOSPITAL**

75, கோயில் வீதி (I.C.R.C. சந்தி அருகில்),
யாழ்ப்பாணம். T.P. :- 021 222 4333

SCAN, ECG மற்றும் இரத்த, சல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.

**அடிப்படை உடற்பரிசோதனைகள்.**

உடல் பருமனுள்ளவர்களைப் பரிசோதிப்பதற்கான
'OBESITY' PACKAGE Rs. 1200 /=

(C-3809)

**MS OFFICE**

கற்பவர்களுக்கு Free Courses
* ICDL-Computer Driving License
* DTP *Internet & email
அனைவரும் பயிலலாம்

மேலதிக விபரங்களுக்கு நேரில்,
MCS
324, பலாலி வீதி,
பரமேஸ்வராசந்தி அருகில்
யாழ்ப்பாண்ம்,
Supported By UNDP/JRRP
(C-4209) www.mcsitcampus.org

**விற்பனைப் பிரதி நிதி தேவை**

பிரபல நிறுவனம் ஒன்றின்
பொருட்களை
சந்தைப்படுத்துவதற்கு
விற்பனை பிரதி நிதி தேவை
- ஆங்கில அறிவு
- முன் அனுபவம்
- பேச்சுத் திறன்

என்பவற்றை கொண்டிருத்தல் வேண்டும்.

Thirumurugan Comnet.
No. 259, K.K.S Road, Jaffna
T.P:- 0777554528 (C4208)

**பதவி வெற்றிடம்**

யாழ். நகரில் இயங்கும் பிரபலமான வர்த்தக நிலையம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு உத்தியோகத்தர்கள் தேவை.

➢ நிர்வாக கண்காணிப்பாளர் (ஆண்)
(மும்மொழித் தேர்ச்சி அவசியம், அரச ஓய்வூதியர்களும் விண்ணப்பிக்க முடியும்)

➢ கணக்குப் பதிவுநர் (ஆண்கள்)
(கணக்கியல் அறிவும் கணனி அறிவும் அவசியம்)

தகைமையுடையோர் தங்களின் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை

விளம்பர இல: 4210
மே/பா வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு உடன் அனுப்பிவைக்கவும்.

(C-4210)

**புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய Nokia Phoneகள்**

தமிழ் மொழியிலான விசைப் பலகையுடன்
(Tamil Language Key Board)
Free DIALOG SIM
With 400/= Reload
Model No 1202
Model No 3120 3G
Model No 1209
யாழ் நகரில் நீங்கள் வாங்கும் Nokia Phone களுக்கு Soft Logic நிறுவனத்தின் 1 வருட உத்தரவாதம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் பெற்றுக்கொள்ளுங்கள்

திருமுருகன் கொம்நெற்

46.ஆடியபாதம் வீதி திருநெல்வேலி T.P No:- 021 222 7835 259.கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்

(C4207)

**நியூ சிற்றி றேடர்ஸ் இடமாற்றம்**

சொனி, பனசொனிக்,சொனிக்கா,ரேடியோ,கசற் ரெக்கோடர், சொனி, பைனியர்,ஆரென் கார் ரேடியோ,கார் சிடி பிளேயர், ஸ்பீக்கர்,சொனி, பனசொனிக் LG 14",17",21" ,கலர் T.V,டிஸ் ரி.வி,கிரோகோல்ட் ரிசீவர், அம்பிளிபயர், வூபர்ஸ்,பவல்ஸ்,சொனி, பனசொனிக் LG,இன்ரெக்ஸ், ரெக்னோரொச் DVD பிளேயர், ஸ்ரப்ளைசர் 500, 1000, 1500,3000 வட்ஸ், சார்ச் லைற்,சார்ச் ரோச்,கிறைண்டர்,ரைஸ் குக்கர்,ரோஸ்ரர், அவன், எலக்ரிக் கேத்தல்,கொட் பிளேட்,காஸ் குக்கர்,அயன்,பிரசர் குக்கர், மண்ணெண்ணெய் அடுப்புகள்,சுவர் மேசை,ஸ்ராண்ட் சுவரை மின் விசிறிகள்,சுவர் கை,மேசை மணிக்கூடுகள், fபிளார்க்,ரோச் மற்றும் மிக்ஸி எலக்ரோனிக் உதிரிப் பொருட்களையும் நிதான விலையில் பெற்றுக் கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருட்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்

நியூ சிற்றி றேடர்ஸ்,
319 A, K.K.S. வீதி,யாழ்ப்பாணம்.
T.P.:- 021 222 3226

(C-4201)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.